Registeted as a News Paper in Sri Lanka

பக்க…

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி

நாதம் 01 | பிரமோதூத ஞூ வைகாசி மீ 7 ஆம் உ | திங்கட்கிழமை | (21 - 05 - 1990) | ஹிஜ்ரி 1410 | வுவ்வா 25 | ஓசை 92

## ஆனையிறவில் திடீர் இராணுவக் குவிப்பு!

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுத் தடைமுகாமுடன் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா பாதுகாப்புப் படையினரின் முகாமில், இந்திய அமைதிகாக்கும் படை வெளியேறிய பிறகு அடையாளமாக ஒரு சிறுதொகை ஸ்ரீ லங்கா இராணுவத்தினரே நிலை கொண்டிருந்தனர். ஆனால் நேற்று முன்தினம் ஸ்ரீ லங்கா இராணுவம் ஆனையிறவில் குவிக்கப்பட்டு வருகிறது. இதேவேளை வவுனியாவில் சில இராணுவ முகாம்களில் ரயர்களும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. பாவிக்க முடியாத இந்த ரயர்களைக் கொண்டு தற்பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

# தமிழீழத்தில் இன்று பூரண ஹர்த்தால்; கடையடைப்பு, போக்குவரத்து இல்லை!

கிளிநொச்சி மாவட்டத்தில்

## 1கோடி 82 லட். 21 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும், வீடு சேதமடைந்தவர்களுக்கும், தொழில் பாதிக்கப் பட்டவர்களுக்கும், மீள் குடியேற்றக்காரர்களுக்குமாக இதுவரை 1 கோடி 82 லட்சத்து 21 ஆயிரம் ரூபா நிவாரணமாக வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் எடுத்துக் கொண்ட துரித நடவடிக்கையினாலே கடந்த சில மாதங்களுக்குள் இவ்வளவு பணமும் கொடுத்து முடிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட ஏனையோருக்கும் நிவாரணம் வழங்குவதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதாக கிளிநொச்சி புனர்வாழ்வு அதிகாரியும் கண்டாவளை

(6ஆம் பக்கம் பார்க்க)

## சுகாதார பணிப்பாளர்களின் பொறுப்பற்ற செயல்!

(கோட்டைமுனை)

சுகாதார சேவைகள் பொது பணிப்பாளர் சுகாதார சேவை சிற்றூழியருக்கான நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதம் மார்ச் 19ஆம் திகதி உரியவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது,

கடிதத்தில் 28.4.90 காலை 8.00 மணிக்கு பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளரின்

தினத்தில் பணிப்பாளரின் பணிமனைக்குச் சென்றனர். '' மறு அறிவித்தல் வரும் வரை நேர்முகப் பரீட்சைகள் பின்போடப் பட்டுள்ளன'' என்ற அறிவித்தல் அட்டை தொங்க விடப்பட்டிருந்ததாம்

## மலையகத்துக்கு புலிகளின் ஆதரவு தொண்டமான்காங்கிரசுக்குகலக்கம்

(நமது அரசியல் நிருபர்)

மலையகத் தோட்டத் தமிழ்மக்களில் சுமார் ஒரு லட்சம்பேரை நாடுகடத்துவதற்கு ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை எதிர்த்தும் மலையக முன்னணித் தலைவர் திரு.சந்திரசேகரனை விடுதலை செய்யக்கோரியும் மலையகத்தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படடுத் துன்புறுத்தப்படுவதைக் கண்டித்தும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடக்கு கிழக்கு மாகாணங்களடங்கிய தமிழீழத்தில்இன்று ஏற்பாடு செய்துள்ள பூரண கடையடைப்பு ஹர்த்தால் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்திருப்பதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

இன்று தமிழீழத்தில் சுகாதாரசேவைகள் தவிர மற்றும் போக்குவரத்துச் சேவைகள், அரசாங்க தனியார் அலுவலகங்கள், கடைகள் எதுவும் செயல்பட மாட்டாதெனவும் வீதிகளில் மக்களின் நடமாட்டமும் பெரும்பாலும் இருக்க மாட்டாதெனவும் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

பல வருடங்களுக்குப் பின்னர் வடக்கிலும், கிழக்கிலும் இன்று பூரண அமைதி நிலவும் சமயத்தில் மலையக மக்களின் நலனுக்காக அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து வடக்கு, கிழக்குமாகாணங்களில் நடை

(6ஆம் பக்கம் பார்க்க)

## "மலையகத் தமிழர் வட - கிழக்கில் வாழ விரும்பினால் உதவுவோம்"

- கரிகாலன்

(கோட்டைமுனை)

தமிழரில் ஒரு பகுதியினரை வலுக்கட்டாயமாக இந்தியாவுக்கு அனுப்பும் அல்லது நசுக்

பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

தேயிலை, றப்பர்த் தோட்டங்களில் தொழில் செய்யும்

ஏற்பாடாக உள்ளோம் என்றார் கரிகாலன்.

## மலையகத்தமிழர் வேறிடம் செல்லத் தேவையில்லை

-- தொண்டா

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும்முன்னாள் இந்தியபிரதமர் லால் பகதூர் சாஸ்திரியும் 1964இல் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்குப் பின்னரே இந்திய வம்சாவழியினர் நாடு திரும்புதல் பிரச்சினையும், இந்திய கடவுச்சீட்டுக்கள் வைத்திருப்பவர்களைத் திருப்பி அனுப்புதல் என்ற பிரச்சினையும் எழுந்தது.

இவ்வாறு கிராமிய கைத்தொழில் உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினை குறித்து தான் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பலதடவைகள் பேச்சுக்கள் நடாத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச உணவுப்பொருள் கண் காட்சியில் இலங்கையும்

(கொழும்பு)

பாரிஸ் நகரில் இவ்வருடம் அக்டோபர் மாதம் நடைபெற உள்ள சர்வதேச உணவுப்பொருட்கள் பற்றிய பொருட்காட்சியில் இலங்கையும் பங்கு பற்ற உள்ளது.

இப்பொருட்காட்சியில் இலங்கை உட்பட சுமார் 75 நாடுகள் பங்குபற்ற உள்ளன.

இலங்கை இக்கண்காட்சியில் பங்குபற்றுவதனால் இலங்கை

வாய்ப்பை பெறுவதற்கு இது சந்தர்ப்பமாக அமையும் என எதிர் பார்க்கப்படுகிறது.(52)

## ஹமீத் நாளை வருகிறார்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்குமாகாண சமாதானக் குழுத் தலை

குமாக இதுவரை 1 கோடி 82 லட்சத்து 21 ஆயிரம் ரூபா நிவாரணமாக வழங்கப்பட்டது.

மாக நடைபெற்று வருவதாக கிளிநொச்சி புனர்வாழ்வு அதிகாரியும் கண்டாவளை

(6ஆம் பக்கம் பார்க்க)

தலைமையைக் கொடுத்திருப்பதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

இன்று தமிழீழத்தில் சுகாதாரசேவைகள் தவிர மற்றும் போக்குவரத்துச் சேவைகள், அரசாங்க தனியார் அலுவலகங்கள், கடைகள் எதுவும் செயல்பட மாட்டாதெனவும் வீதிகளில் மக்களின் நடமாட்டமும் பெரும்பாலும் இருக்க மாட்டாதெனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பல வருடங்களுக்குப் பின்னர் வடக்கிலும், கிழக்கிலும் இன்று பூரண அமைதி நிலவும் சமயத்தில் மலையக மக்களின் நலனுக்காக அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து வடக்கு, கிழக்குமாகாணங்களில் நடை

(6ஆம் பக்கம் பார்க்க)

## சுகாதார பணிப்பாளர்களின் பொறுப்பற்ற செயல்!

(கோட்டைமுனை)

சுகாதார சேவைகள் பொது பணிப்பாளர் சுகாதார சேவை சிற்றூழியருக்கான நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதம் மார்ச் 19ஆம் திகதி உரியவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கடிதத்தில் 28.4.90 காலை 8.00 மணிக்கு பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளரின் பணிமனையில் நேர்முகப் பரீட்சைக்கு குறிப்பிட்ட ஆவணங்களுடன் தோற்றும்படி குறிப்பிடப்பட்டிருந்தது.

மட்டக்களப்பின் பலபகுதிகளிலிருந்தும் ஆண்களும் பெண்களுமாக பலர் குறித்த தினத்தில் பணிப்பாளரின் பணிமனைக்குச் சென்றனர். '' மறு அறிவித்தல் வரும் வரை நேர்முகப் பரீட்சைகள் பின்போடப் பட்டுள்ளன'' என்ற அறிவித்தல் அட்டை தொங்க விடப்பட்டிருந்ததாம்

சிலதினங்களுக்கு முன்பும் இதே போல் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள்பணிமனைக்குவந்துஏமாற்றத்தோடு திரும்பிச் சென்றனர். இந்த ஏமாற்று விளையாட்டு ஏன் எனபொதுமக்கள் அங்கலாய்க்கின்றார்கள்

## வண. லோங் அடிகள் ஞாபகார்த்த தின விழா

(யாழ்ப்பாணம்)

வண. லோங் அடிகளாரின் ஞாபகார்த்த தினவிழா நாளை 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று நடைபெற உள்ளது. முத்திரை வெளியீடு, சஞ்சிகை வெளியீடு விழா என்பன யாழ் புனித சம்பத்தரிசியார் கல்லூரியில் இடம்பெறும். நினைவுதின விழா காலை 7 மணிக்கு எரியூட்டப்பட்ட யாழ். நூல்நிலைய முன்றலில் ஆரம்பமாகும்.

மாலை நிகழ்ச்சிகள் பி. ப. 4-30 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்ச்சிகளை யாழ். மாநகராட்சி மன்றம் ஒழுங்கு செய்துள்ளது அனைவரையும் இவ்விழாவில் கலந்து கொள்ளுமாறு யாழ்.



மாநகரஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## "மலையகத் தமிழர் வட-கிழக்கில் வாழ விரும்பினால் உதவுவோம்"

- கரிகாலன்

(கோட்டைமுனை)

தமிழரில் ஒரு பகுதியினரை வலுக்கட்டாயமாக இந்தியாவுக்கு அனுப்பும் அல்லது நசுக்கும் நிலை ஏற்படும் வரை தமிழீழ விடுதலைப் புலிகள் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்என்று விடுதலைப் புலிகளில்முக்கியஸ்தர்களில் ஒருவரான கரிகாலன் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

தேயிலை, றப்பர்த் தோட்டங்களில் தொழில் செய்யும் மலையகத்தமிழர் வடக்கிலும் கிழக்கிலும் குடியேற விரும்பும் பட்சத்தில் நாம் அவர்களுக்கு உதவி செய்யத் தயாராக உள்ளோம். தேவைப்படும் வசதிகளை வழங்கவும் நாம் முன் ஏற்பாடாக உள்ளோம் என்றார் கரிகாலன்.

கரிகாலன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இந்திய அரசாங்கம் மற்றத் தமிழ் குழுக்களோடு பேசியது போன்று இலங்கைஅரசாங்கமும்மற்றக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டால் மக்கள்துணையுடன் முறியடிப்போம்

-- டொமினிக்

(யாழ்ப்பாணம்)

கடந்த காலத்தில் இந்திய இராணுவம் எம்மீது யுத்தத்தைத் தணித்தது போல் மீண்டும் எம்மீது ஓர் யுத்தம் பலவந்தமாகத் திணிக்கப்படுமானால் அதனை தகுந்த வகையில் எமது மக்களின் பூரண ஒத்துழைப்புடன் நிச்சயமாக தோற்கடிப்போம் என்ற நம்பிக்கையை கடந்த காலத்தில் இலங்கை, இந்திய இராணுவங்களுடன் மோதி வீரமரணமடைந்த எமது போராளிகளின் தியாகம் எமக்கு உறுதுணையாக நிற்கிறது.

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் அவர்கள் லெப்டினன் கேணல் ராதாவின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

மேலும் அவர் உரையாற்றும்போது லெப்ரினன் கேணல் ராதா அவர்கள் மதிநுட்பம் பெற்ற ஒரு வழிகாட்டி மட்டுமல்ல அவருடைய ஒவ்வொரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச உணவுப்பொருள் கண் காட்சியில் இலங்கையும்

(கொழும்பு)

பாரிஸ் நகரில் இவ்வருடம் அக்டோபர் மாதம் நடைபெற உள்ள சர்வதேச உணவுப்பொருட்கள் பற்றிய பொருட்காட்சியில் இலங்கையும் பங்குபற்ற உள்ளது.

இப்பொருட்காட்சியில் இலங்கை உட்பட சுமார் 75 நாடுகள் பங்குபற்ற உள்ளன.

இலங்கை இக்கண்காட்சியில் பங்குபற்றுவதனால் இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் உணவுப் பொருட்களுக்கு நல்ல சந்தை வாய்ப்பை பெறுவதற்கு இது சந்தர்ப்பமாக அமையும் என எதிர் பார்க்கப்படுகிறது.(52)

## விதை வெங்காய விலையில் வீழ்ச்சி

(வவுனியா)

வவுனியா பகுதியில் விதை வெங்காயத்தின் விலைவீழ்ச்சி அடைந்துள்ளது.

கடந்த வாரத்தில் விதை வெங்காயத்தின் விலை இரண்டாயிரம் ரூபா அளவில் விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதையடுத்து இப்பகுதி விவசாயிகள் பம்பாய் வெங்காய விதை அதிகளவில்பயிர்செய்ய தீர்மானித்தனர். சிலர் இவ்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஹமீத் நாளை வருகிறார்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்குமாகாண சமாதானக் குழுத் தலைவரும் நீதி அமைச்சருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் நாளை செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணம் வருகிறார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு,கோ. மகேந்திரராசா(மாத்தயா)செயலாளர்திரு யோகரெத்தினம் யோகி, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோரைச் சந்தித்துப் பேசவிருக்கும் அமைச்சர் ஹமீதிடம் அரசின் சமீபத்திய நடவடிக்கைகள் பற்றி எடுத்துக்கூற விருப்பதாக அறியப்படுகிறது.

## "எமது பலம் எமது படை எமதுநிலை; மலையகத்தின் நிலை வேறுபாடு!"

-- மகேந்திரராசா

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கில் எம்மால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் விளைவாக எமது படை, எமது பலம், எமது போராட்டம் என நாம் எமது சொந்தக் காலிலேயே நிற்கின்றோம். ஆனால் மலையக மக்கள் பிரதேச ரீதியாக வேறுபட்டு' இலங்கை அரசின் இராணுவ அடக்குமுறைகளுக்கும், இனவாதத்திற்கும் உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர். இத்தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தமிழ் மக்கள் அறிவுபூர்வமாக; உணர்வுபூர்வமாக உணர்ந்து செயற்பட வேண்டும்''.

இவ்வாறு நேற்று கோப்பாயில் நடைபெற்ற ''குடிக்கத் தயார்'' (Ready to Drink) குளிர்பானம் தயாரிக்கும் நிறுவனத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா குறிப்பிட்டார்.

எமது உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்தி எமது உற்பத்திகளை இலாப நோக்கின்றிப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்றும், இம்முயற்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம் வேண்டுமா, உரிமையை வழங்கும்படி அரசிற்குக் கூறுங்கள்

- சிவசுப்பிரமணியம்

(வவுனியா)

அரசாங்கம் அம்பாறை, திருக்கோணமலை போன்ற மாவட்டங்களுக்குச் சிங்களவர்களான அரசாங்க அதிபர்களை நியமிக்கின்றது- ஆனால், பாராளுமன்றத் தேர்தலின்போது தமிழ்பேசும் முஸ்லிம்தளை அல்லது தமிழரைத் தொகுதிகளில் வேட்பாளர்களாக நிறுத்துகின்றது. இது ஏன்? இவ்வாறு சமாதானப் பாதயாத்திரிகர்களை வரவேற்று வவுனியா கந்தசாமி கோயிலடியில் நடந்த கூட்டத்தில் கந்தையா சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

வடமேல் மாகாணசபை உறுப்பினர் பி. டி, நிஸங்க திசாநாயக்கா தலைமையிலான சமாதானப் பாதயாத்திரை நேற்றுக் காலை மதவாச்சியிலிருந்து ஆரம்பமாகி பி. ப. 1-30 மணியளவில் வவுனியா வந்தடைந்தது. இனங்களுக்கிடையில் சமாதானம், ஒற்றுமை, சகோதரத்துவம் வேண்டி மேற்கொள்ளப்பட்ட இப்பாத யாத்திரையில் 5,000 க்கும் அதிகமான சிங்கள மக்களும், பௌத்த பிக்குகளும் கலந்து கொண்டனர். மதவாச்சி விகாராதிபதி வண. திக்கோணவ விமலதர்ம தேரோவும் பாதயாத்திரையில் கலந்து கொண்டார்.

கந்தையா சுப்பிரமணியம் தொடர்ந்து பேசும்போது,

அன்று முதல் இன்றுவரை மாறி மாறி வரும் அரசாங்கங்கள் தமிழ் பேசும் மக்களது

(6ஆம் பக்கம் பார்க்க)

மலையக முன்னணித் தலைவர் சந்திரசேகரன்

## இன்று விடுதலை இல்லையேல் புதுவேகத்துடன் போராட்டம்

(தலவாக்கொல்லை)

மலையக முன்னணித் தலைவர் சந்திரசேகரன் திங்கட்கிழமை (இன்று) விடுதலை செய்யப்படாவிட்டால் மலையகத்தில் புதிய வேகத்துடன் புதிய வடிவங்களில் தோட்டத்தொழிலாளரின் போராட்டம் வெடித்துப் பரவும்'' என்று மலையக முன்னணியின் செயலாளர் பி.ஏ.காதர் நேற்று விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

மலையக முன்னணித் தலைவர் திரு. சந்திரசேகரன் கைது செய்யப்பட்டதை எதிர்த்தும், மலையகத்தில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தப்படுவதைக் கண்டித்தும் தலவாக்கொல்லையிலும், நுவரேலியா மாவட்டத்திலும் அறுபதாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து வந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

புதிய அச்சடிக்கும் திருமணக்கார்ட்டுகள், சகலடிசைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்யஸ்ரீகாந்த்புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம்,

(B/1002

கோழிக்குஞ்சு விநியோகம்

PRIMA LOCHMANசிவப்பு வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் பறோயிலர் குஞ்சுகள் கறுப்பு சிவப்பு சேவற்குஞ்சுகள் GOLDEN COMET HYLINE BLACK பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். Nallur Farm Centre 19 முருகேசர் ஒழுங்கை முத்திரச் சந்தையடி, நல்லூர்.


# சுகாதார வசதிகள் இன்றி தென்மராட்சி மக்கள் அவதி

(சாவகச்சேரி)

எமது மத்தியிலே நிறைய வைத்திய கலாநிதிகள் இருக்கிறார்கள் அதிலும் ஆற்றல் மிக்க நிபுணர்கள் இருக்கிறார்கள். ஆனால் எமது மக்களுக்கு வைத்தியம் செய்ய இன்று மருத்துவர்கள் இல்லையே

இதனால் நாம் பெருந்தொகையான மக்களை இழந்து விட்டோம். எங்கே எமது மத்தியிலே உள்ள வைத்திய கலாநிதிகள் சொன்னால் வெட்கக்கேடு அவர்கள் தமது சுய வாழ்க்கை நலன்களைப் பெருக்கிக் கொள்ள, சகல வசதியுமுள்ள வெளிநாடுகளில் இருக்கிறார்கள்.

மேற்கண்டவாறு சாவகச்சேரியில் தமிழீழவிடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் சம்பிர தாயப்படிதிறந்து வைக்கப்பட்ட சுகாதாரப் பிரிவுத் திறப்பு விழாவில் உரை நிகழ்த்திய தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளர் திரு. ப. தினேஷ் கூறினார்.

தென்மராட்சி நோயாளர் நலன்புரிச்சங்கச் செயலாளர் திரு. சி. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் திரு. தினேஷ் மேலும் கூறியதாவது :

தென்மராட்சி பச்சிலைப் பள்ளியை உள்ளடக்கிய எமது பிரதேச மருத்துவ சுகாதார நிலையில் மிகவும் பின் தங்கியுள்ளது. கடந்த எமது போராட்டக் காலங்களின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் எமது மக்கள் எவ்வளவு கஷ்டங்களையும் இன்னல்களையும் அனுபவித்துள்ளனர்.

பல இடங்களில் சுகாதார மருத்துவ அறிவின்மையாலும் சுகாதார வசதியின்மையாலும் பலரை இழந்துள்ளோம்.

இனிமேலும் எதிர் காலங்களில் இப்படியான ஒரு துர்ப்பாக்கியமான நிலை கண்டிப்பாக ஏற்பட இடமிருக்காது அதற்காகவே இந்த அமைப்பை நாம் ஆரம்பித்துள்ளோம்.

சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளர் திரு. ரீ. நவரத்தினராஜா பேசுகையில் எமது சுதந்திரத்திற்கு போராட்டம் மட்டுமல்ல சமுதாயம் சுதந்திரமாக வாழக்கூடிய முயற்சிகளும் வேண்டுமென்றார்

இந்துக்கல்லூரி அதிபர் திரு கே. எஸ். குகதாசன் பேசுகையில் நமது மத்தியில் ஒழுக்கத்திலும் சுகாதாரம் வேண்டும். போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தார்கள். அவர்களுடன் சில நோய்களும் வந்தன. இன்று அவர்கள்போய் விட்டார்கள் ஆனால் அவர்களுடன் வந்த நோய்கள் மட்டும் போகவில்லை. நாம் ஒழுக்கமாக இருந்தால் எயிட்ஸ் நோய்கூட தலை காட்டமுடியாது என்றார்.

வேறும் பலர் பேசினர்.

(35)

# கிழக்கு பிராந்திய போ. வ. சபை ஒப்பந்த ஊழியர்களுக்கு குறிப்பிட்டவேதனம்இல்லை

கிழக்குபிராந்தியபோ.வ.சபையின்கீழ்ஒப்பந்த ஊழியர்களாகப்பணிபுரியும் ஊழியர்களின் தற்போதைய நாள் சம்பளம் ரூபா 18. 50 வழங்கப்படுகின்றது.

இதனால் இவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் எந்த விதமான உதவிகளும் இல்லாமல் இருக்கின்றது. ஆனால் மத்திய போ. வ. சபையினால் சகல பிராந்திய மற்றும் இதர பாடசாலை வேலைத்தள தலைவருக்கும் சென்ற 1988. 04. 27ஆம் திகதி சுற்று நிருபத்தின்படி 1988. 05. 01 ஆம் திகதியிலிருந்து நாள் ஒன்றுக்கு ஐம்பது ரூபாய் வழங்கும்படி அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இதுகாலவரைக்கும் இது தங்களுக்கு வழங்கப்படாமல் இருப்பதாகவும் இதற்கான நடவடிக்கை எடுத்து எங்களின் முழுச்சம்பளப்பணத்தையும் நிலுவையுடன் பெற்றுத்தருமாறும் ஒப்பந்த ஊழியர்கள் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் திரு. கஸ்ரோவைக் கேட்டுக் கொண்டனர்.

இச்சுற்று நிருபமும் அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

(46)

# முல்லைத்தீவில் கவின்கலை கல்லூரி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கவின்கலைக் கல்லூரி ஒன்று மிகவும் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான கட்டிட வேலைகள் துரித கதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இவ் வேலை முடிந்ததும் வாத்தியக்கருவிகள் தருவிக்கப்பட்டு முல்லை மாவட்டத்தில் பயனுள்ள கவின் கலைக் கல்லூரியாக இது அமைக்கப்படும் எனக் கலைக் கலாசாராப் பிரிவு பொறுப்பாளர் சங்கர் தெரிவித்துள்ளார். (58)


மனோகரா - (யாழ்)
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு 10-30, 2–30. 6.30 & 9.30
CLINT EASTWOOD IN HEART BREAK RIDGE
வெகுவிரையில்
ராஜா சின்ன ரோஜா

வெலிங்டன் (யாழ்)
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

ஹரன் - (யாழ்)
தினசரி 4·00, 7.00, 9.30
விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
ஜெய்சங்கர் K.R. விஜயா அசோகன் நாகேஸ் V. K. ராமசாமி தேங்காய் சீனிவாசன் சுருளிராஜன் நடித்த
திருடி
B 878

வின்ஸர் - யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

ராஜா (யாழ்)
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 10·00, 2·00, 4·45, 7·00, 9·45
இன்று
Terence Hill Bud Spencer
I AM FOR THE HIPPOPOTAMUS

நியூ சாந்தி (யாழ்)
தினசரி 4.00, 6.30 7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில் 10:30 2:30,: 4,00 6:00 7-30 9-00
UNMASKING THE IDOL
(Color)

லிடோ (யாழ்)
18 முதல் 21 வரை
Daily at. 4. P.M 6.30 & 9.30 P.M.
Sat &Sun& Puplic Hoiiday 10.30 2.30 4.30 6.30 9.30
CAN BE DONE AMIGO
(color)
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

ஸ்ரீதர் - (யாழ்.)
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ விடுமுறை நாட்களில் 4 காட்சிகள் 10.30, 2 30, 6.30, 9.30
ரஜனி, ராதிகா, ரகுவரன் நடித்த
ஊர்க்காவலன்
50-வது நாளை நோக்கி
B/999


# உளச்சுகாதாரத்தையும் வளர்க்க வேண்டியதுஅவசியம்

(சாவகச்சேரி)

சுகாதார அபிவிருத்தி செய்யப்படும்போது, உடல் சுகாதாரத்தைமட்டும் அபிவிருத்தி செய்தால் போதாது, உளச் சுகாதாரத்தையும் வளர்க்க தமிழீழ விடுதலைப் புலிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரதேச அரசியல் பொறுப்பாளருக்கு ஓர்அவசிய வேண்டுகோளை விடுத்தார்.

திரு முத்தையா தனது வேண்டுகோளில் மேலும் கூறியதாவது: தமிழ் நாடகம் சினிமா ஆகியவற்றில் மக்களின் குறிப்பாக இளைஞர்களின் உளச்சுகாதாரம் பாதிப்படையும் வகையில் பாலியல் காட்சிகள் சேர்க்கப்பட்டுள்ளன இவற்றை எமது பிரதேசத்தில் காட்ட முடியாதவாறு தடை செய்யப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதி அலுவலகத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் திரு முத்தையா அந்த வேண்டுகோளை விடுத்தார். திரு முத்தையா மேலும், நகர சபை விசேட ஆணையாளர் திருரீ நவரத்தினராஜா விடமும் ஒரு வேண்டுகோளை விடுத்தார் அதில் சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட சுடலைகளுக்கு மலசலகூடம் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

(35)

# ஐந்தாம் ஆண்டு முதல் மும்மொழிகளில் தேர்ச்சி

பாடசாலைகளில் ஒன்பதாம் ஆண்டு வகுப்பு முதல் தொழிற்பயிற்சி அளிக்கப்படவுள்ளது என்று கல்வி உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

தொழிற்பயிற்சிகளை உயர் கல்விக்காக தெரிவுசெய்யும் மாணவர்களுக்கு தொழில் நுட்பப் பட்டம் வழங்கப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கான திட்டங்கள் கல்வியமைச்சால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதனை மேற்கொள்ளும் மாணவர்களுக்கும் வசதிகள் செய்து தரப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

ஐந்தாம் ஆண்டு வகுப்பு முதல்சகல மாணவர்களுக்கும் சிங்களம், தமிழ் ஆங்கில மொழிகளை போதிக்கும் திட்டம் ஒன்றும் வகுக்கப்படும்.

மாணவர்கள் உயர்கல்வி பெறும்போது இந்த மொழிகளை நன்கு அறியவேண்டும் என்பதே தமது நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கல்முனை ஸாஹிராவில் [illegible]

(நிந்தவூர்)

கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் மாணவர்களுக்கான நிரந்தர விடுதி ஒன்று அமைக்கப்படாத குறை பல வருடகாலமாக நீடித்துவருகின்றது.

இக்கல்லூரியின் கல்வித் துறை அபிவிருத்திகாரணமாக [illegible] மாணவர்கள் அனைவரையும் சேர்த்துக் கொள்ளமுடியாத நிலையிருந்து வருகின்றது.

எனினும் 1964 ஆம் ஆண்டு முதல் இக்கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திசபை பாடசாலை வகுப்பறைக் கட்டடத்தில் விடுதி ஒன்றை அமைத்து [illegible]

# மட்டக்களப்பு நகரில் மாநகரசபை நடவடிக்கை

(வந்தாறுமூலை)

மட்டக்களப்பு கோட்டை முனைப்பாலத்துக்கும் அதனை அண்டிய இரு வீதிகளுக்கும் நகரை அலங்கரிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக தற்பொழுது உள்ள மின்குமிழ்களுக்கு பதிலாக ரீயூப்லைட் பொருத்தி [illegible]

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகாதார வசதி இல்லாத தேர்னீகடைகள், சாப்பாட்டுக் கடைகள் போன்றவற்றிற்கு கடும் நடவடிக்கை எடுப்பதற்கு சுகாதார பரிசோதகர் நடவடிக்கை எடுத்துள்ளார். (29)

# பரீட்சை

(விசேடநிருபர்)

பின்போடப்பட்டிருந்த யாழ். கிரிக்கட் மத்தியஸ்தர் சங்கத் [illegible] ஆம் திகதி நடைபெற இருக்கிறது.

யாழ். இந்துக் கல்லூரியில் நாளைய (22.5.90) தினம் காலை 9.30 மணிக்கு பரீட்சைகள் ஆரம்பமாகுமென அறிவிக்கப்படுகிறது. (21)


எமது நேற்றைய புதிய வெளியீடு !
ராம்கி சீதா நாஸர்
1. "மருது பாண்டி"
(ஒறிஜினல்)
பாரதிராஜாவின்
2. "என் உயிர்த் தோழன்"
(ஒறிஜினல்)
குணம்

வேண்டுகோளில் மேலும் கூறியதாவது: தமிழ் நாடகம் சினிமா ஆகியவற்றில் மக்களின் குறிப்பாக இளைஞர்களின் உளச்சுகாதாரம் பாதிப் களுக்கு மலசலகூடம் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (35)

காட்டமுடியாது என்றார். வேறும் பலர் பேசினர். (35)

இதற்கான திட்டங்கள் கல்வியமைச்சால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதனை என்பதே தமது நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கல்முனை ஸாஹிராவில் மாணவர் விடுதி போதாது

(நிந்தவூர்)

கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் மாணவர்களுக்கான நிரந்தர விடுதி ஒன்று அமைக்கப்படாத குறை பல வருட காலமாக நீடித்துவருகின்றது.

இக்கல்லூரியின் கல்வித்துறை அபிவிருத்திகாரணமாக வெளி மாவட்டங்களைச் சேர்ந்த பெருந்தொகையான மாணவர்கள் இங்கு சேர்ந்து கல்வி பயில்வதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எனினும் போதிய அளவு மாணவர்கள் தங்கிப் பயிலக்கூடியவாறு நிரந்தர விடுதி ஒன்று சல்வி அமைச்சினால் இங்கு இதுவரை அமைக்கப்படாததால் விண்ணப்பிக்கும் மாணவர்கள் அனைவரையும் சேர்த்துக் கொள்ளமுடியாத நிலையிருந்து வருகின்றது.

எனினும் 1964 ஆம் ஆண்டு முதல் இக்கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திசபை பாடசாலை வகுப்பறைக் கட்டடத்தில் விடுதி ஒன்றை அமைத்து இயங்கி வருகின்றது

இந்த விடுதியில் 120 மாணவர்கள் மட்டுமே தங்குவதற்கான வசதி உண்டு. இந்த விடுதியை பொறுப்பேற்றும் நிரந்தர விடுதி ஒன்றை அமைக்குமாறும் கல்வி அமைச்சுக்குப் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் பயன் கிடைக்கவில்லையெனப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர் (53)

## மட்டக்களப்பு நகரில் மாநகரசபை நடவடிக்கை

(வந்தாறுமூலை)

மட்டக்களப்பு கோட்டை முனைப்பாலத்துக்கும் அதனை அண்டிய இரு வீதிகளுக்கும் நகரை அலங்கரிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக தற்பொழுது உள்ள மின்குமிழ்களுக்கு பதிலாக ரீயூப்லைட் பொருத்தி பாலத்தை இரவில் அழகாக வைத்திருப்பதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

புகையிரத நிலைய வீதிகளில் முன்னர் வெளிச்சம் இன்றி காணப்பட்டது. தற்பொழுது நாற்பது ஆயிரம் ரூபா செலவில் மினசார வசதி செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது புதூர் 5ஆம் குறிச்சிக்கும், சின்ன உப்போடைகுறிச்சிக்கும் புதிய மின் இணைப்பு வேலைகள் நடைபெற்று வருகிறது.

1990 ஆம் ஆண்டில் செய்ய வேண்டிய வன்செயல் காலத்தில் சேதமாக்கப்பட்ட தெருக்களுக்கான மதிப்பீடு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கு மாநகர சபையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகாதார வசதி இல்லாத தேர்னீகடைகள், சாப்பாட்டுக் கடைகள் போன்றவற்றிற்கு கடும் நடவடிக்கை எடுப்பதற்கு சுகாதார பரிசோதகர் நடவடிக்கை எடுத்துள்ளார். (29)

## பரீட்சை

(விசேடநிருபர்)

பின்போடப்பட்டிருந்த யாழ். கிரிக்கட் மத்தியஸ்தர் சங்கத்தின் பரீட்சை நாளை 22 ஆம் திகதி நடைபெற இருக்கிறது.

யாழ். இந்துக் கல்லூரியில் நாளைய (22. 5. 90) தினம் காலை 9.30 மணிக்கு பரீட்சைகள் ஆரம்பமாகுமென அறிவிக்கப்படுகிறது. (21)


எமது நேற்றைய புதிய வெளியீடு !

ராம்கி சீதா நாஸர்

1. "மருது பாண்டி"

( ஒறிஜினல் )

பாரதிராஜாவின்

2. "என் உயிர்த் தோழன்"

(ஒறிஜினல்)

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு கோபுர வீதி,

யாழ்ப்பாணம். Phone: 23665 (B/999)


## பாரம்பரிய கலைகளுக்கு புத்துயிர் அளிக்கத் திட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்கிளப்பு மாவட்டத்தில் கடந்த கால சூழ்நிலை காரணமாக அருகியநிலையிலுள்ள கிராமிய பாரம்பரிய கலைகளுக்கு புத்துயிர் அளிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

இத்தகவலை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வெல்லாவெளி பிரதேச அமைப்பாளர் நெல்சன் தெரிவித்தார்.

கடந்த கால வன்செயல்களினால் எமது பாரம்பரிய கலைகளின் வளர்ச்சி குன்றிப் போய்விட்டது.

இக்கலைகள் நாம் பேணி பாதுகாக்கப் படவேண்டியவை. இதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது என்றார். (37)

## திருகோணமலைப் பகுதிக்கு வி.பு.ம. முன்னணி விஜயம்

(திருக்கோணமலை)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த, செயலதிபர் யோகரட்ணம் யோகி, முன்னணியின் முக்கியஸ்தர் கவிஞர், மு.வே.யோ வாஞ்சிநாதன், திருமலை மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் ரூபன்,விடுதலைப் புலிகள் வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த வசந்தன் ஆகியோர் அடங்கிய குழுவினரை, பிரதான வீதியிலிருந்து, திருக்கடலூர் கடற்கரையில் அமைந்திருந்த சனசமூக நிலைய மேடைக்கு மேளதாள வாத்தியங்கள் முழங்க மாலைகள் அணிவித்து அப்பகுதி மக்கள் அழைத்துச் சென்றனர்.

அங்கு சென்றதும் புலிக்கொடியை ஏற்றி வைக்குமாறு அப்பகுதி மக்கள் செயலதிபர் யோகியைப் பணித்தனர். அவர் கொடியை ஏற்றி வைத்துப் பேசினார். அதன் பின் கவிஞர், வாஞ்சிநாதன், மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பளர் ரூபன் ஆகியோரும் அங்கு பேசினர்.

துள்ளி எழுந்து அலைகள் ஆர்ப்பரிக்கும் திருமலைக் கடலில் இரும்புமிதவைகளில் கட்டப்பபட்ட புலிகளின் சிகப்பு-மஞ்சள் நிறக்கொடிகளை அப்பகுதி மக்கள்பறக்கவிட்டிருந்ததைப் பார்க்க மிகவும் அழகாக இருந்தது.

திருக்கோணமலைக்கு அண்மையிலுள்ள துவரங்காடு என்ற இடத்தில் நடைபெற்ற விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காகவும் இவர்கள் வந்திருந்தனர்.

அங்குள்ள மக்கள் எல்லோரும் மக்கள் முன்னணிப் பிரமுகர்களைக் கண்டதும் கண்கலங்கியவாறு தமது நெஞ்சக் குமுறல்களை எடுத்துக் கூறினர்.

தமக்குக் கட்டிடமோ, வீதியோ, வேலை வாய்ப்போ தேவையில்லை என்றும், தாம் இம் மண்ணில் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழ்வதற்கு சுதந்திரத் தமிழீழ அரசு ஒன்றை உருவாக்கித் தாருங்கள் என்று ஒருமித்த குரலில் கூறினர்.

காலங்காலமாகத்திருமலை மாவட்டத்தில் நடைபெற்று வரும் வன்முறைகளினால் அதிகம் பலியாகி வரும் மக்களில் துவரங்காட்டு மக்கள் குறிப்பிடக் கூடியவர்கள். இந்தச் சிறிய கிராமத்தில் தமிழர்களும்– முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

## கலை கலாசார அவை தீவுப்பகுதியில்நிறுவப்பட்டது

(தீவுப்பகுதி)

தீவசமக்களின் கலை, கலாசாரங்களைப் பேணும் வகையில் 'தீவக கலை கலாசார அவை' விடுத்லைப்புலிகளின் மக்கள் முன்னணியினரால் வேலணையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ மக்களை கலை, கலாசார சீரழிவிலிருந்து காப்பாற்றுவதும் மறைந்து போகும் கலைகளுக்குப் புத்துயிர் அளிப்பதும், கலைஞர்களை வெளியுலகிற்கு அறிமுகம் செய்து வைப்பது. இதன் முக்கிய பணிகளாகுமென தீவக விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. வி. கஸ்ரோ தமதுரையில் குறிப்பிட்டார்.

தீவக கலை கலாசார அவைப் பொறுப்பாளர் திரு ஏ. நரேஸ் இங்கு உரையாற்றுகையில் தீவகத்திலுள்ள கலைஞர்களின் விபரங்கள் திரட்டப்படுவதாகவும் அவர்களைத்தனித்தனியாக சந்தித்து உரையாட விருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தீவகத்திலுள்ள கலைகலாசாரங்களைப் பேணும் மன்றங்களை தீவக கலைகலாசார அவையில் பதிவு செய்வதெனவும் அத்தகைய மன்றங்களின் செயலாளர்கள் உடனடியாக முழு விபரங்களுடன் தீவக கலைகலாசார அவையில் தம்மைப்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றார். (15)

## குழந்தைப் பருவத்திலேயே சமயப்பற்று வளரவேண்டும்

(சுதுமலை)

'எமது இளம் சிறார்களுக்கு நாட்டுப் பற்றுடன் சமயப் பற்றும் மிகவும் அவசியமான தொன்றாகும். பாடசாலைகளிலே சமய அறிவு சம்பந்தமான சில கருத்துக்களை மேலோட்டமாகவே போதிக்கின்றார்கள்.

எமது சமயம் போதிக்கின்ற ஆழமான கருத்துக்களை, ஒழுக்க நெறிகளை எமது இளம் சந்ததியினர் குழந்தைப் பருவத்திலிருந்தே பெற்று வருவார்களேயானால் உறுதியும் பலமும்கொண்ட உண்மையான அமைப்புகளில் அவர்கள் முதன்மை பெற்றுவிளங்குவார்கள்.'

இவ்வாறு திருநெல்வேலி அரசடி சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்தில் வழிபடுவோர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய நல்லூர் உதவிஅரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் குறிப்பிட்டார்,

இவ்விழாவில் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிக விரிவுரையாளர் திரு. மா. வேதநாதன் உரையாற்றும் போது, இப்படியான பொது அமைப்புகள் சமய அறிவுப் போட்டிகளை நடாத்தி இளம் உள்ளங்களிலே சமய அறிவை வளர்ப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஞானப்பிரகாசர் சுவாமிகள் காலம் தொடக்கம் இந்த திருநெல்வேலி பிரதேசம் ஒரு புண்ணிய பூமியாகவே விளங்கி வருகின்றது. மேலும் மக்களை சமயப்பற்றுடையோர்களாக, சமய அறிவுடையோர்களாக வளர்த்து நாடும் மக்களும் சுபீட்சம் பெற நாமனைவரும் பாடுபட வேண்டும் என்றார்.

சமயப் போட்டியில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றோர் விபரம் பின்வருமாறு:-

பாலர்பிரிவு:- 1ஆம் இடம் செல்விசோ. நிஸ்யா 2ஆம் இடம் செல்வன் இ. மதன் 3ஆம் இடம் செல்வன் ம. திருவரங்கன்.

கீழ்ப் பிரிவு:- 1ஆம் இடம் செல்வன் ப. இலங்கராஜ் 2ஆம்இடம்செல்விக. றேனுகா 3ஆம் இடம் செல்வன் வி.சுகந்தன்

மத்திய பிரிவு: 1ஆம் இடம் செல்வி ந. தயாபரா 2 ஆம் இடம் செல்வன் வெ. நாகநாதா 3ஆம் இடம் தி. கேசவராஜன்

மேற்பிரிவு; 1ஆம் இடம் செல்வி த.ஜானகி 2ஆம்இடம் செல்வன் இ. நித்தியானந்தன் 3 ஆம் இடம் செல்வி வி. வனஜா (19)

## கடல்காற்றுகொந்தளிப்பால் மீன் வியாபாரம் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது வீசும் பருவக்காற்று மீன் பிடித்தொழிலுக்கேனோ சாதகமாக அமையாத காரணத்தினால் யாழ்ப்பாண மீன்சந்தையில் மீனுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

மீன் பிடிப்பதற்கு கடலுக்குச் செல்லும் தொழிலாளர்கள் அற்ப சொற்ப மீன்களுடனேயே கரையேறுகின்றார்கள். சிலர் வெறும் கையுடன் திரும்புகின்றார்கள்.

மீன் சந்தையில் காணப்படும் குறைந்தளவு மீன்களை கூடுதலான நுகர்வோர்கள் நாடுவதனால் மீனுக்குபெரும் கிராக்கி ஏற்பட்டு அதன் விலையும் உயர்வடைந்து காணப்படுகின்றது.

இதனால் பல நுகர்வோர்கள் மரக்கறிவகைகளை கூடுதலாக கொள்வனவு செய்ய முற்படுவதனால் மரக்கறிகளின் சில்லறை விலைகளும் அதிகரித்துவிட்டன. (52)

### கண்டெடுக்கப்பட்டது!

பரீஸ்ரெக்ஸ் ஸ்தாபனத்தில் கடந்த மாதம் கண்டெடுக்கப்பட்ட இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பணத்துடன்கூடிய பர்ஸ் ஒன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தவறவிட்டவர்கள் சரியான தகவல்களைச் சமர்ப்பித்து பர்ஸைப் பெற்றுக்கொள்ளும்படி பரீஸ் ரெக்ஸ் முகாமையாளர் கேட்டுள்ளார்.

# இந்திய - பாக். யுத்தம் ஏற்படாது தடுக்க அமெரிக்கா நடவடிக்கை

(வாஷிங்டன்)

இந்தியாவும், பாகிஸ்தானும் காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக யுத்தத்தில் ஈடுபடுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

இதன்படி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் தேசிய பாதுகாப்புத் துணை ஆலோசகர் றொபேர் பேர்க் தலைமையிலான குழு பாகிஸ்தான் பிரதமர் திருமதி பூட்டோவையும், இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

தற்போது மத்திய கிழக்கு நாடுகளில் ஆதரவு தேடச் சுற்றுப் பயணம் செய்துவரும் பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாஸீர் பூட்டோவை அவர் முதல் சந்திப்பார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் பாகிஸ்தான்சென்று இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேசுவார்.

இதனையடுத்து இந்தியப் பிரதமர் வி. பி. சிங்குடனும் இந்திய அதிகாரிகளுடனும் அவர் பேச்சு நடத்துவார்.

அமெரிக்க செனற் சபையில் பேசிய செனற்றர் ஒருவர், காஷ்மீர்பிரச்சினையில் சிம்லா ஒப்பந்தப்படி பாகிஸ்தானும் இந்தியாவும் செயற்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

பத்தொன்பது ஆண்டுகளாக இந்த ஒப்பந்தப்படி அமைதி பேணப்பட்டு வந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தானின் பாதுகாப்பிற்கு அதிகமான ஆயுத உதவிகளை அமெரிக்கா வழங்கக் கூடாது என்று மற்றொரு செனற்றர் கூறியுள்ளார்.

## யாழ், மாவட்டத்திற்கு 23 1/2 கோடி கனடிய உதவி

(திருக்கோணமலை நிருபர்)

யாழ். மாவட்டத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக 23 1/2 கோடி ரூபா கனடிய அரசினால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியைப்பயன்படுத்தி சந்தைகள், நூல் நிலையங்கள், வைத்தியசாலைகள் ஆகியனவைகளின் மின்சார விநியோகமும் சீரமைக்கப்படும்.

## பாஸ்போர்ட் விண்ணப்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செயலகத்தில் பாஸ்போர்ட்விண்ணப்பப் படிவத்திற்குச் சுமார் பத்து மாத காலமாக நிலவிய தட்டுப்பாடு தற்போது நீங்கியுள்ளது.

செயலகத் தகவல் நிலையத்தில் விண்ணப்பதாரிக்கு தலா ஒன்று என்ற ரீதியில் இது விநியோகம் செய்யப்படுகிறது.

பாஸ்போர்ட் விண்ணப்பப் படிவம் தட்டுப்பாடு குறித்து கடந்த வாரம் 'ஈழநாதம்' செய்தி வெளியிட்டமைதெரிந்ததே. (37)

## "ரெடி ரு றிங்"

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிராமோதய சபை அருகில் இன்று ''குடிக்கத்தயார்'' ''ரெடி ரு றிங்'' என்னும் பெயரில்ஒரு உள்ளூர் குளிர்பான நிலையம் திறந்து வைக்கப்பட உள்ளது.

தமிழீழ ஆய்வுநிறுவனத்தின் ஆதரவுடன் அமைக்கப்பட்டிருக்கும்இந்த குளிர்பான ஸ்தாபனத்தில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட குளிர் பானங்களும் விற்பனைக்குவிடப்படும். (லோ)

## ப.நோ.கூ. சங்கத்திற்கு 3 மாடிக் கட்டடம்

(கரவெட்டி)

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஐந்து லட்சம் ரூபா செலவில் மூன்று மாடிக் கட்டடம் அமைக்கப் படவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் திணைக்களம் இந்த நிதியை வழங்கவுள்ளது.

முதற் கட்டமாக இரண்டு லட்சம் ரூபாவை திணைக்களம் இச்சங்கத்திற்கு வழங்கியுள்ளது.

1987 இல் இடம்பெற்ற லிபறேசன் ஒப்பரேசன் நடவடிக்கைகளின் போது இந்தச்சங்கம் சேதமாக்கப்பட்டதுடன், இங்கிருந்த பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## பல்கலைக்கழகத்துக்கு பிரிட்டிஷ் கவுன்சில் உதவி

(மட்டக்களப்பு)

அண்மையில் பிரித்தானியா சென்றிருந்த கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கே. சந்தானம் அந்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கு விஜயம் செய்தார்.

கிழக்கு பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கு தேவையான ஒத்துழைப்புக்களை பெறுவதற்கான பேச்சு வார்த்தைகளிலும் ஈடுபட்டார்.

பாடத்திட்டம், ஆராய்ச்சி, ஊழியர்களுக்கு பயிற்சி போன்ற உதவிகள் பெறுதல் குறித்து உரையாடினார்.

இவரது கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைத்துள்ளதால் நிதியுதவிகளை பிரித்தானியகவுன்சில் வழங்க முன் வந்துள்ளது. (37)

## மனித நேய ஸ்தாபனங்களுக்கு 138 லட். ரூ. வழங்கப்பட்டது

(கொழும்பு)

ஸ்ரீலங்காபௌத்தசமயவட்டாரங்களில் சர்ச்சைக்குரியவரான வண. விபாசி தேரோ கடந்த செவ்வாயன்று சுற்றுப் பிரயாணம் ஒன்றை மேற்கொண்டு மலேசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் சென்றுள்ளார்.

ஸ்ரீலங்காவின் வழக்கிலிருக்கும் தேரவாத பௌத்தம். முதியோர்கள் வாதம் பிரிவிலிருந்துவிலகி மகாயனபௌத்தத்தைத் தழுவியதற்காக யப்பானிலிருந்து நாடுதிரும்பிய வண விபாசி தேரோவுக்கான வரவேற்பு வைபவங்கள்இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இதே வேளை விபாசி தேரோ சுற்றுப்பிரயாணத்தை மேற் கொள்ளுவதற்குமுதல் மகாநாயக்க பீடாதிபதிகளுக்கு கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளார்.

இக் கடிதத்தில் தான் மகாயன பௌத்தத்தைச் தழுவிய தற்கானகாரணகாரியங்களை விளக்கியிருப்பதுடன், ஸ்ரீ லங்காவிலுள்ள மனித நேய ஸ்தாபனங்களுக்கும், நிறுவனங்களும் வழங்கிய நிதிஉதவியின் பட்டியல் ஒன்றையும்இணைத்துள்ளார்.

பட்டியலின் பிரகாரம் மொத்தம் ரூபா 138 லட்சம் மனிதநேய ஸ்தாபானங்களுக்கும், நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. எனக் கூறப்பட்டுள்ளது.

## பரீட்சையில் குதிரை ஓட்டம் 300 மாணவர்கள் கைது

(டாக்கா)

பரீட்சையில் ஆள் மாறாட்டம் அல்லது மோசடி செய்த குற்றத்துக்காக பங்களாதேசில் கடந்த நான்கு நாட்களில் 3,000 மாணவர்கள் பரீட்சைக்குத் தொடர்ந்து தோற்றாமல் தடுக்கபட்டுள்ளார்கள்.

இத்துடன் பரீட்சைக்குத் தோற்றாமல் தடுக்கப்பட்டுள்ள மாணவரின் தொகை 14,000மாக உயர்ந்துள்ளது.

கடந்த எட்டு நாட்களுக்கு முன் ஆரம்பமான இடை நிலைப்பாடசாலைத் தராதரப் பத்திர பரீட்சையில் மாணவர்களுக்கு பரீட்சை மண்டபத்தில் உதவினார்கள் என்ற குற்றத்திற்காக 500 ஆசிரியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு இடைநிறுத்தம் செய்துவைக்கப்பட்டுள்ளனர்.

பரீட்சை மண்டபங்களிலும் அதனையடுத்த இடங்களிலும் குழப்பம் விளைவித்த 300 மாணவர்கள் கைது செய்யப் பட்டுள்ளார்கள். பாதுகாப்புப் படையினருக்கும் மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 400 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

502 பரீட்சை நிலையங்களில் 100 பரீட்சை நிலையங்களில் பலாத்காரம் கட்டவிழ்த்து விடப்பட்டதாகப் பரீட்சை நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பங்கள தேசம் முழுவதும் மொத்தம் 450,000 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள்.

## ஆந்திரப் புயலில் மாண்டோர் 700 பேர்

(விஜயவாடா)

சமீபத்தில் வீசிய சூறாவளியினதும் மழை வெள்ளத்தினாலும் ஆந்திரமாநிலத்தில் மாண்டவர் தொகை எழுநூற்றுக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

நேற்று இம்மாநிலத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை இரண்டாவது தடவையாகச் சென்று பார்த்த பிரதமர் வி. பி. சிங் மேலதிகமாக பிரதம மந்திரி நிதியிலிருந்து இரண்டு கோடி ரூபாவை உதவி வழங்க உறுதியளித்தார். ஏற்கனவே முப்பத்திரண்டு கோடி ரூபா நிவாரண உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

## கலைக் கோட்டத்திற்கு தேனிசையின் அன்பளிப்பு

(சாவகச்சேரி)

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் கலைக் கோட்டத்திற்கு தேனிசை செல்லப்பாவின் கலைஞர் கோஷ்டியினர் பல வாத்தியக் கருவிகளை மனமுவந்து அன்பளிப்புச் செய்தனர்.

தபேலா புல்லாங்குழல்கள் உட்பட பல வாத்தியக் கருவிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. தமிழீழ விடுதலை புலிகளின் கலைக் கோட்டத்தைப் பார்த்தவுடன் தாம் பிரமித்து விட்டதாகவும்தெரிவித்தனர்.

போராட்டத்தின் மூலம் தமிழீழ மண்ணைமீட்பதையே தாகமாகக் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளில் இப்படி கலை உள்ளமும் மிளிர்வதை யாராலும் பாராட்டாமல் இருக்க முடியாது. என்றும் தேனிசை செல்லப்பா வாயாரப்புகழ்ந்தார்.

கவிஞர், கலைஞர் புதுவை ரத்தினதுரை இந்தகலைக்கோட்டத்தை அமைத்துள்ளார் அவரின் கலையுள்ளம் விபரிக்க முடியாத அற்புதம் என்றார்.

இவர்களின் அன்பளிப்புக்களை கலைஞர் புதுவைஇரத்தினதுரை பெற்றுக் கொண்டார். (35)

## சீமேந்து தொழிற்சாலை சம்பளம்வழங்கநடவடிக்கை

(யாழ்ப்பாணப்)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக தொழில் புரிந்தோருக்கு சம்பள நிர்ணய சபையின் தீர்மானப்படி சம்பளம் வழங்கப்படவுள்ளது. 1981 ஜூன் முதல் 1983 ஜூன் வரையும் இந்த ஊழியர்களுககு கொடுக்கப்படவேண்டிய 54 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை விசாரணையின்பின்னர் வழங்கப் படவுள்ளது.

இந்தத் தொகையைகட்டம் கட்டமாக தொழில் அணை

இவ்வாறு செலுத்தப்படும் தொகை வேலை செய்தவர்களுக்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கமூலம் வழங்கப் படவுள்ளது.

## கல்முனைப்பிரதேசத்திலும் புழுவிவகாரம் பரவியுள்ளது

(காத்தான்குடி)

கடந்த சில வாரங்களுக்கு முன் மட்டக்களப்பு மாவட்டத்தில் பேசப்பட்டு வந்த ''புழு'' விவகாரம் இப்போது அம்பாறை மாவட்டத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகி

கோழி முட்டைகளிலும் கூட புழு இருப்பதாக கூறப்படுவதாகவும், அதனால் உருளைக் கிழங்கு, மரக்கறிவகைகளையே புசிக்க வேண்டியிருக்கிறது.

## பாகிஸ்தானுடன் யுத்தம் ஏற்பட்டால் இந்தியாவுக்கு பாதிப்புக்கள் ஏற்படும்

(புதுடில்லி)

பாகிஸ்தானுடன் இந்தியா போர் புரிய வேண்டிய நிலை ஏற்படுமானால் இந்தியாவுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும். அதன் பொருளாதார பாதிப்பையும் எதிர்த்துச் சமாளிக்கப் பல ஆண்டுகள் ஏற்படும் என முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி இந்திரா காங்கிரஸ் கட்சி மாநாட்டில் நேற்றுப் பேசுகையில கூறினார்.

பாகிஸ்தானுடன் போர்புரியும் திசையிலேயே தேசியமுன்னணி அரசு இந்தியாவை உந்தித் தள்ளிவருகிறது எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

ஜனதாதள் கட்சியின் குறைபாடுகளை மூடிமறைப்பதற்காகவே தேசிய முன்னணி அரசு இவ்வாறு நடந்து வருகிறது.

காஷ்மீர் பற்றிய தேசிய முன்னணி அரசின் கொள்கையையும் ராஜீவ் காந்தி கண்டித்தார்.

அவ்வாறு பாகிஸ்தானுடன் போர் மூண்டால் இந்திரா காங்கிரஸ் முழு ஆதரவு தரும் எனவும்அவர் இங்குகூறினார்.

## பரிசளிப்பு விழா

(மன்னார்)

மன்னார் சென் சேவியர் ஆண்கள் மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 18ஆம் திகதி அதிபர் பி. வேதநாயகம்தலைமையில் நடைபெற்றது.

## தமிழ் அரச ஊழியர்கள் தமிழ் மொழியில் பதிவுகளை, கடிதங்களை எழுதவேண்டும்

தமிழ் அரச ஊழியர்கள் ரயில்வே பயண ஆணைப் பத்திரம் (வாறன்ற்) எழுதும் போது ஆங்கிலத்திலேயே எழுதுகின்றனர். இராணுவத்தினர் அதனை சிங்களத்தில்

## சம்பளம் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணப்)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக தொழில் புரிந்தோருக்கு சம்பள நிர்ணய சபையின் தீர்மானப்படி சம்பளம் வழங்கப்படவுள்ளது. 1981 ஜூன் முதல் 1983 ஜூன் வரையும் இந்த ஊழியர்களுககு கொடுக்கப்படவேண்டிய 54 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை விசாரணையின்பின்னர் வழங்கப்படவுள்ளது.

இந்தத் தொகையைகட்டம் கட்டமாக தொழில் ஆணையாளருக்கு செலுத்துவதற்கு சீமேந்து கூட்டுத்தாபனம்சம் மதித்துள்ளது. முதற்கட்டமாக 15 லட்சம் ரூபா செலுத்தப்படவுள்ளது.

இவ்வாறு செலுத்தப்படும் தொகை வேலை செய்தவர்களுக்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கமூலம் வழங்கப்படவுள்ளது.

பட்டியலின் பிரகாரம் மொத்தம் ரூபா 138 லட்சம் மனிதநேய ஸ்தாபானங்களுக்கும், நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. எனக் கூறப்பட்டுள்ளது.

## கல்முனைப் பிரதேசத்திலும் புழு விவகாரம் பரவியுள்ளது

(காத்தான்குடி)

கடந்த சில வாரங்களுக்கு முன் மட்டக்களப்பு மாவட்டத்தில் பேசப்பட்டு வந்த ''புழு'' விவகாரம் இப்போது அம்பாறை மாவட்டத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

குறிப்பாக கல்முனை, மருதமுனை, சாய்ந்த மருது, போன்ற முஸ்லிம் கிராமங்களில் மீன் வகைகளிலும், இறைச்சியிலும் கோழி முட்டைகளிலும் கூட புழு இருப்பதாக கூறப்படுவதாகவும், அதனால் உருளைக் கிழங்கு, மரக்கறி வகைகளையே புசிக்க வேண்டியிருக்கிறது.

இதன் உண்மைநிலையை அம்பாறை மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் அறிவித்து வதந்திகளை நீக்கிட வழி செய்ய வேண்டும் என்றும் மக்கள் கேட்டுக்கொண்டனர். (55)

## இந்தியாவுக்கு பாதிப்புக்கள் ஏற்படும்

(புதுடில்லி)

பாகிஸ்தானுடன் இந்தியா போர் புரிய வேண்டிய நிலை ஏற்படுமானால் இந்தியாவுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும். அதன் பொருளாதார பாதிப்பையும் எதிர்த்துச் சமாளிக்கப் பல ஆண்டுகள் ஏற்படும் என முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி இந்திரா காங்கிரஸ் கட்சி மாநாட்டில் நேற்றுப் பேசுகையில் கூறினார்.

பாகிஸ்தானுடன் போர்புரியும் திசையிலேயே தேசியமுன்னணி அரசு இந்தியாவை உந்தித் தள்ளிவருகிறது எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

ஜனதாதள் கட்சியின் குறைபாடுகளை மூடிமறைப்பதற்காகவே தேசிய முன்னணி அரசு இவ்வாறு நடந்து வருகிறது.

காஷ்மீர் பற்றிய தேசிய முன்னணி அரசின் கொள்கையையும் ராஜீவ் காந்தி கண்டித்தார்.

அவ்வாறு பாகிஸ்தானுடன் போர் மூண்டால் இந்திரா காங்கிரஸ் முழு ஆதரவு தரும் எனவும்அவர் இங்குகூறினார்.

## பரிசளிப்பு விழா

(மன்னார்)

மன்னார் சென் சேவியர் ஆண்கள் மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 18ஆம் திகதி அதிபர் பி. வேதநாயகம்தலைமையில் நடைபெற்றது.

## தமிழ் அரச ஊழியர்கள் தமிழ் மொழியில் பதிவுகளை, கடிதங்களை எழுதவேண்டும்

(கிளிநொச்சி)

அரசகருமமொழி அமுலாக்கல் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

அரசகருமமொழி அமுலாக்கல் அமைச்சின் உதவி ஆணையாளர் திரு. பி. சிவராஜசிங்கம் கலந்து கொண்ட இக் கலந்துரையாடல் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டு தமிழ் மொழி அமுலாக்கலில் உள்ள சிக்கல்கள், கஷ்டங்களைப் பற்றி எடுத்துக் கூறினர்.

அரசகருமமொழி அமுலாக்கல் அமைச்சின் உதவி ஆணையாளர் திரு. பி. சிவராஜசிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

சிங்களமும் தமிழும் அரசகரும மொழியாக அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது. ஆதலால்சகலரும்தமிழிலேயே சகல பதிவுகளையும், கடித தொடர்புகளையும் செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்வதற்கு ஏதாவது தடங்கல்கள், இடையூறுகள் இருந்தால் தெரிவிக்கலாம்.

இது தவிர ஆங்கிலம் தொடர் மொழியாகவும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் எந்த மொழியில் தொடர்புகொள்ளுகிறார்களோ, அந்த மொழியில் பதில் அனுப்பப்படல் வேண்டும்.

ஒவ்வொரு திணைக்களத்தில் வேலை செய்யும் ஊழியர்கள் விரும்பினால் பிற மொழிகள் பயிலுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். அவ்வாறு தமிழ்மொழியுடன் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக கற்பதன் மூலம், மொழி பெயர்ப்பு செய்ய சுலபமாக இருக்கும்.

மொழிகளைக் கற்பதற்கு வேண்டிய ஆசிரியர்களையும், பிற உதவிகளையும் செய்துதர நாம் தயாராக இருக்கிறோம். அதற்குரிய பணத்தை சம்பந்தப்பட்ட திணைக்களம் வழங்கும் என்றார்.

தமிழ் மொழி அமுலாக்கலில் உள்ள இடைஞ்சல்கள் பற்றி கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ்மொழி அமுலாக்கல் செய்வதற்கு போதியளவு ஊழியர்கள் இல்லை என்றும், தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் போதியளவு இல்லை என்றும், தட்டெழுத்தாளர்களும், மொழி பெயர்ப்பாளர்ளும் இல்லை

அவர் தொடர்ந்து பேசுகையில் தென்பகுதியிலுள்ள அரச அலுவலகங்களில் ஆங்கிலம், சிங்களம் தெரிந்த தமிழ் ஊழியர்களை நியமிப்பதன் மூலம் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்றார்.

கிளிநொச்சி மாவட்ட உதவி காணி ஆணையாளர் திரு. க. குணராசா பேசுகையில் தென் பகுதியிலுள்ள பல திணைக்களங்களுடன் தமிழில் கடிதத் தொடர்புகளை வைத்துக்கொண்டால் பதில் சிங்களத்தில் கிடைக்கிறது. ஆனால் கொழும்பிலுள்ள தலைமைக் காணி அலுவலகத்துடன் தமிழில் தொடர்பு கொண்டால் தமிழிலேயே பதில் கிடைக்கிறது என்றார்.

கிளிநொச்சி புகையிரத நிலைய அதிபர் பேசுகையில் தமிழ் அரச ஊழியர்கள் ரயில்வே பயண ஆணைப் பத்திரம் (வாறன்ற்) எழுதும்போது ஆங்கிலத்திலேயே எழுதுகின்றனர். இராணுவத்தினர் அதனை சிங்களத்தில் எழுதுகிறார்கள். தமிழ் அரச ஊழியர்கள் மட்டும் ஏன் தமிழில் எழுதப் பயப்படுகிறார்கள்.

வடக்கு கிழக்கில் மட்டுமல்ல தென்பகுதியிலும் கூட தமிழில் எழுதிப் புகையிரத ஆணைச் சீட்டைப் பெற முடியும். மொழி தெரியாத காரணத்தைச் சாட்டாக வைத்துப் பயணச் சீட்டை வழங்காது விட முடியாது. வழங்காது விட்டால் அவருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க முடியும்.

ஆகக்குறைந்தது கொழும்பு வரை செல்லும் ஊழியர்களாவது இதற்கு விண்ணப்பிக்கும் போது தமிழில் விண்ணப்பித்து பயணச்சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாது விடுவோமேயானால் நாமே தமிழ்மொழி அமுலாக்கலை தடைசெய்பவர்களாவோம் என்றார்.

காணிப் பதிவாளர் அலுவலக அதிகாரி திரு. ந. சதாசிவஐயர் பேசுகையில் கூறியதாவது:-

எமது தலைமைக் காரியாலயத்திலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அக் கடிதத்தில் 3 மொழிம்ளிலும் (றப்பர் ஸ்டாம்ஸ்) முத்திரையிடப்படவேண்டும் எனத் தனிச் சிங்களத்தில் (றப்பர் ஸ்டாம்ஸ்) முத்திரையிடப்பட்டிருந்தது.

3 மொழிகளிலும் முத்திரையிடப்பட வேண்டும் என எமக்கு அறிவுரை கூறும் தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்தவர்கள் முதலில் தாங்கள் செய்யும் தவறைத் திருத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் எமக்கு எழுதிய கடிதத்தில் 3 மொழிகளுக்குப் பதிலாக தனிச்சிங்கள மொழியில் முத்திரையிடப் பட்டிருந்தது. இனிமேலாவது இவ்வாறான தவறுகள் ஏற்படாது இருக்க சம்பந்தப்பட்டவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றார். (49)

## அரசின் குள்ளநரித்தனத்தை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்

- கவிஞர் வாஞ்சிநாதன்

(யாழ்ப்பாணம்)

''தமிழ் பேசும் மக்களைக் காப்பாற்றுவதற்காக 1986ல் கப்டன் பாறூக் என்ற தமிழீழ விடுதலைப்புலி, யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து வெளியேறிய ஸ்ரீலங்கா இராணுவத்துடன் மோதி வீரமரணமடைந்தான். அவனைப் போல் தமிழ் மண்ணைக் காப்பாற்றுவதற்காக சகல முஸ்லிம்களும் இணைந்து போராட முன்வரவேண்டும். அப்போதுதான் தமிழர் முஸ்லிம்கள் என்ற பேதங்களை நம் மத்தியில் இருந்து ஒழிக்க முடியும்''

இவ்வாறு, அண்மையில் மூதூர் முஸ்லிம் வித்தியாலயத்தில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினரின் கூட்டத்தில் பேசும்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தரும், கவிஞருமாகிய, மு. வேயோ. வாஞ்சிநாதன் கூறினார். அவர் தொடர்ந்து கூறியதாவது-

''எதிர் காலத்தில் தமிழர் முஸ்லிம்கள் எமது தாயகப் பூமியில் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால், ஸ்ரீலங்கா அரசு தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

திருக்கோணமலை மாவட்டத்தில் இன்று சுமார் 60 ஸ்ரீலங்கா காவற்படைகளின் முகாம்கள் அமைந்திருக்கின்றன. சராசரி ஒரு மைலுக்கு ஒரு முகாம் என்ற வீதத்தில் சிங்களக் காவற்படை முகாம்களை 1983 ஆம் ஆண்டுக்குப் பின் ஏற்படுத்தியிருக்கும் ஸ்ரீலங்கா அரசு, திட்டமிட்ட முறையில் தமிழ்பேசும் மக்களை திருக்கோணமலை மாவட்டத்தில் நசுக்க எண்ணியிருக்கிறது. தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பூமியாகிய திருக்கோணமலையை வெகு விரைவில் அபகரிப்பதே அரசின் முழுமையான திட்டமாகும்.

அரசின் இந்த குள்ளநரித்தனத்தைப் புரிந்து கொண்டு ஒரேமொழியைப் பேசும் தமிழர்களும் முஸ்லிம்களும் தமக்கு இடையே நிலவிவரும் சிறு, சிறு கருத்து வேற்றுமைகளை மறந்து மண்ணின் நலனுக்காக இனியாவது ஒன்றுபட்டுச் செயலாற்ற முன்வரவேண்டும்''.

மேற்படி கூட்டத்தில் திருக்கோணமலை மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் ரூபனும் உரையாற்றினார்.

## கண் வைத்திய நிபுணர் தேவை ரோட்டரி கழகத்திடம் மகஜர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொதுவைத்தியசாலையில் கண் வைத்திய நிபுணர் இன்றி நோயாளர்கள் பாதிக்கப்படுவதால் கண் வைத்திய நிபுணரொருவர் அழைக்கப்பட்டு இலவச சிகிச்சை முகாம் வாழைச்சேனை, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி ஆகிய இடங்களில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு சமூகசேவைகள் உதவிப் பணிப்பாளர் திரு. இரா. தியாகராசா றோட்டறி கழகத்தின் தலைவரைக் கேட்டுள்ளார்.

சமூக சேவைகள் இலாகா மாவட்டத்தில் இலவசமாக நூறு பேருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கத் தீர்மானித்துள்ளது.

இதற்குத் தகுதியானவர்கள் உதவி அரச அதிபர்கள் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். ஆனால் கண் வைத்திய நிபுணரின் அறிக்கை தேவை.

இந்நிலையில் கண்டி, கொழும்பு செல்ல வேண்டிய நிலை ஏற்படாது என்றும் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (37)

## நாங்கள் போராளிகள் அல்ல; விடுதலைகோரி உண்ணாவிரதம்

(சென்னை)

''நாங்கள்போராளிகளல்ல. நாங்கள் அகதிகள். எங்களை உடனடியாக சிறையிலிருந்து விடுதலைசெய்யுங்கள்'' என்று கூறி, கைது செய்யப்பட்டு, சென்னை மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் வெளியேறும்வரை சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் இது சம்பந்தமாகத் தெரிவித்துள்ளனர். ''நாங்கள் தமிழகத்தில் எந்தக் குற்றமும் புரிந்தவர்களல்ல. உயிருக்குப் பயந்து புகலிடம்தேடி வந்த அகதிகள். நாங்கள்நிரபராதிகள். எங்களை விடுதலை செய்து, தமிழக அகதிகள் முகாமில் தங்க அனுமதிக்க வேண்டுமென்று கோரி, தமிழக முதலமைச்சருக்கு, சிறையிலுள்ளவர்களில் 109 பேர் கை ஒப்பம் இட்டு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

தாங்கள் உண்ணாவிரதமிருப்பதாக முதலமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், தங்களுக்கு ஒரிஸா மாநிலத்தில் துன்பம் இழைக்கப் பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

## வீடமைப்புக்கான மானியக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட புனர்வாழ்வு புனரமைப்புத்திட்டத்தின் கீழ் வீடமைப்புக்கான மானியம் பெறுவோருக்கான கொடுப்பனவுகள் சென்ற 17ஆம் திகதி ஒட்டிசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பகுதிகளுக்கு மாங்குளம் மக்கள் வங்கிக் கிளையூடாக வழங்கப்பட்டனஎனமுல்லைத்தீவு மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபை முகாமையாளர் தெரிவித்தார். (லோ)

# பரந்தன் தொழிற்சாலைக்கு புதிய தொழிற் சங்கம்

(பரந்தன்)

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத் தொழிற் சங்கம் கடந்த வியாழக்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தொழிற் சங்கமாக இயங்கவுள்ளது.

இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் கிளிநொச்சிமாவட்டப் பொறுப்பாளர்கோபி தலைமை தாங்கினார். விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணித் தலைமைச் செயலகத்தில் இருந்து வில்லிஸ், கதிரேசு ஆகியோரும் கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரதிநிதிகளாக அன்பன், நிருபன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இவ் அங்குரார்ப்பணக் கூட்டம் இறந்த போராளிகளுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பமானது.

கோபி தனது தலைமையுரையில் தலைவர் பிரபாகரனின் தலைமையி கீழ் சிறுதொகையுடன் ஆரம்பித்த போராட்டம் இன்று தேசிய இனப் போராட்டமாக வளர்ச்சி பெற்று மக்கள் போராட்டமாக பரிணமித்துள்ளது என்றார். அதைத் தொடர்ந்து பேசிய வில்லிஸ் 1956 ஆம் ஆண்டில் இருந்து ஒரு ஒழுங்கான தலைமையின்மையால் தொழிலாளர்கள் தென்னிலங்கைத் தலைமைகளையும் வெளிநாட்டுத் தலைமைகளையும் நம்பி ஏமாறவேண்டியிருந்தது எனத் தெரிவித்தார். தற்பொழுது முழுத் தமிழ் இனத்திற்கும் தலைவர் பிரபாகரன் தலைவராகக் கிடைத்துள்ளார் என்றார்

கதிரேசு அவர்கள் பேசும் போது தென்னிலங்கைத்தலைவர்கள் தொழிலாளர்கள் பகடைக்காய்களால் ஆக்கப்பட்ட வரலாற்றைக் கூறி தலைவர் பிரபாகரனின் தலைமைத்துவத்தை ஏற்று அங்கத்தவர்களாகச்சேர்ந்து போராட்டத்தை வலுப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். மேலும் தொழிற்சங்கயாப்பை வாசித்து விளக்கமும் அளித்தார். பின்னர் தொழிற் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இத்தொழிற் சங்கத் தலைவராக இ தம்பையாவும், செயலாளராக த. சுந்தரமூர்த்தியும், பொருளாளராக கு. சிவபாதசுந்தரமும், உப தலைவராக பொ. சுந்தரராசாவும், உப செயலாளராக சோ. மகாலிங்கமும் தெரிவு செய்யப்பட்டார்கள். செயற்குழுஉறுப்பினர்களாக ரி. குகதாசன், வெற்றிவேல், வ. மரியஜெயதாசன், சி. துரைரெட்ணம், சி நமச்சிவாயம், த. இரத்தினம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பின்னர் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களும் உரையாற்றினர்.

# வானொலிக் கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் வானொலிப்பெட்டிகளுக்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது.

இதன்படி தற்போது 30ரூபாவாக உள்ள இக்கட்டணம் இனிமேல் 50 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

இவ்வாண்டு இந்த வானொலி அனுமதிப் பத்திரத்தின் மூலம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு ஒரு கோடியே எண்பத்தி நாலாயிரத்து எழுநூறு ரூபாவரை அதிகரித்துள்ளது.

வருடாந்தம் மின்கட்டணமாக மின்சார சபைக்கு 38 இலட்சம் ரூபாவை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் செலுத்துகிறது.

# வவுனியாவில் அமைதிக்காக திருத்தல யாத்திரை

(வவுனியா)

தமிழ்மக்கள் சிறப்படைவதற்கும் தற்போதுகாணப்படும் இடைக்கால அமைதி தொடர்ந்து நீடிப்பதற்குமே இச் சமயப் பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை மாலை வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் நிகழ்ந்த திருத்தல பாதயாத்திரையின் பூர்த்தி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது வவுனியா உதவி அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா அற்புதராஜாமேற் கண்டவாறு தெரிவித்தார்.

இம் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சமயப் பாதயாத்திரை, வவுனியாவில் உள்ள ஆலயங்கள் தோறும் சென்று திங்கட்கிழமை முடிவடைந்தது.

இவ் விழாவில் தவத்திரு ஆத்மஜோதி முத்தையாஅவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா அற்புதராஜா தொடர்ந்து பேசும் போது,

இப் பாதயாத்திரை மக்களின் மனதிலே பூரிப்பை ஏற்படுத்திவிட்டது. அமைதி, சமாதானம், ஒற்றுமை எம்மத்தியில் ஏற்பட இப்பாதயாத்திரை வழி வகுக்கிறது.

வவுனியா பகுதி கிராமமக்கள் அனைவரும் அன்புடன், ஆதரவுடன், ஒற்றுமையுடன் இப்பாதயாத்திரையில் கலந்து கொண்டதை எண்ணும்போது சந்தோஷம் ஏற்படுகிறது என்றார். மேலும் பலர் இந்நிகழ்ச்சியில் கலந்து கெண்டுஉரையாற்றினார்கள். (தி)

# சட்டவிரோத மின்பாவனை குறைந்து வருகிறது

மட்டக் களப்பு மாவட்டத்தில் சட்ட விரோத மின் இணைப்புக்கள் நிலைமை சீரடைந்துள்ளதால் குறைந்துள்ளது' இதனால் மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டமும் குறைந்துள்ளது. அத்துடன் சில இடங்களில்சட்டவிரோத மின் இணைப்பு காணப்படுகிறது. இவற்றினைத் தடுக்கமக்கள் ஒத்துழைப்புதரவேண்டும்

இவ்வாறு மட்டக்களப்பு மின்சாரத் திணைக்கள மின் பொறியியலாளர் திரு. இ. ஜெகநாதன் ஈழநாதம் நிருபரிடம்தெரிவித்தார்.

மின் அலகுகளின் கட்டணங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளமையினால் மின்மானிகையாடல் சட்ட விரோத மின்இணைப்பு என்பனவற்றை துண்டிப்பதற்கு திடீர் நடவடிக்கை குழு நியமிக்கப்படவுள்ளது'

இவ்வாறு கண்டு பிடிக்கும் சட்ட விரோத மின் பாவனையாளருக்கு ரூபா இரண்டாயிரம் குற்றப் பணமாக அறவிடப் பட்டுள்ளது. மின்மானியில் இருந்து பக்கத்து வீடுகளுக்கு மின்சாரம் வழங் கப்படுவது கண்டுபிடிக்கப் பட்டால்அவற்றிக்கு முன்னூறு ரூபாய் அறவிடப் படும்.

மாதம் இரண்டு லட்சம் ரூபாய் நட்டத்தில் இயங்கி கொண்டு இருக்கும் மின்சார பகுதிக்கு சட்ட விரோத மின் பாவனையை தவிர்த்து கொண்டால் நட்டம் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்தார். (29

## பொதுக்கூட்டம்

முறைசாராக் கல்விப்பிரிவில் கல்வி பயின்று யாழ். அரசாங்க அதிபர் காரியாலயத்ினூடாக உலக வங்கியிலிருந்து நிதி உதவி பெற விண்ணப்பித்தோருக்கான பொதுக்கூட்டம் ஒன்று 27ஆம் திகதி யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் நடைபெற உள்ளது. (லோ

# றாக்கிங் பெயரில் மாணவிகள் இம்சிப்பு

(கொழும்பு)

பொலிஸ் நேற்று முன்தினம் றாக்கிங்கில் ஈடுபட்ட குற்றத்துக்காக கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்பது பேரை கொழும்பு பல்கலைக்கழ உப வேந்தரிடம் கையளித்தது.

றாக்கிங்கில் ஈடுபட்டார்கள் என்ற குற்றத்துக்காக ஒன்பது பேரும் புதனன்று கைது செய்யப்பட்டார்கள் என்று வாராந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் பொலிஸ்மா அதிபர் ஏனைஸ்ட் பெரேரா தெரிவித்தார்.

றாக்கிங்கில் ஈடுபடும் மாணவர்கள் பற்றி கவனமாக இருக்கும்படி பொலிஸார் பணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

றாக்கிங்கில் ஈடுபடும் நோயாளி மாணவர், மீது தாம் மிகக் கண்டிப்பாக இருக்கப்போவதாகப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் வாராந்தப் பத்திரிகையாளர் மகாநாட்டுக்குத்தலைமை வகித்துப் பேசும்போது தெரிவித்தார்.

றாக்கிங்கை நிறுத்தினால் தான் தாம் தமது பெண்பிள்ளைகளை பல்கலைக் கழகத்துக்கு அனுப்பப் போவதாக மனம் நொந்து போன பெற்றோர்கள் தனக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கூறியிருப்பதாக அமைச்சர் ரஞ்சன் தெரிவித்தார்.

தானும் வெள்ளியன்று றாக்கிங் தொடர்பாக மூன்று தொலைபேசி அழைப்புகளைப் பெற்றதாக பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார். றாக்கிங் என்ற பெயரில் மாணவிகளைத் தொந்தரவுபடுத்தி இம்சிக்கிறார்கள் என்றும் தமக்குத் தகவல் வழங்கிய ஒருவர் றாக்கிங் செய்து குளத்தில் தள்ளி சேற்றில் நீந்தும்படி கட்டாயப் படுத்தியுள்ளார்கள் என்றும் அமைச்சர் ரஞ்சன் கூறினார்.

# நிவாரணக் கோடுப்பனவுகள் மேலதிக அட்டைகள்பறிமுதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் புனர்வாழ்வு நிவாரண கொடுப்பனவு அட்டை ஒன்றுக்கு அதிகமாக வைத்திருந்த நால்வரிடம் மேலதிக அட்டைகள் பறிமுதல செய்யப்பட்டு உள்ளது.

மேற்படி தகவலைமாவட்ட புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளர் திரு சல்வின் இரசனியேஸ் தெரிவித்தார்

வாகரை நடமாடும் செயலகத்தில் மூவரிடமும், வடமுனையில் ஒருவரிடமும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்

இவற்றின் மூலம் இவர்கள் மேலதிகமாகநிவாரணம் பெறவிருந்தும் தடைப்பட்டுள்ளது.

இதே போலஉள்ளவர்களின் விபரங்கள் பற்றி பொது மக்கள் புகார்கள் தெரிவித்து வருகின்றனர். (37)

# மருத்துவ மாதர் சங்கத்தின் தீர்மானங்கள் முன்வைப்பு

(சாவகச்சேரி)

அரசாங்க மருத்துவ மாதர் சங்கப் பொதுக் கூட்டத்தில், சங்கம் ஐந்து கோரிக்கைகளை முன் வைக்கவுள்ளதாக முன்னறிவித்தல் கொடுத்துள்ளது.

இச்சங்கத்தின் தலைவி திருமதி கே இரத்தினம் ஊடாக, செயலாளர் திருமதி எஸ் பரமலிங்கம் இக்கோரிக்கைகளை சமர்ப்பிப்பார்.

அக் கோரிக்கைகளாவன மருத்துவ மாதர்களுக்கு சம்...

...டியாக தரம் உயர்த்தப் பட வேண்டும்.

பிரசவ விடுதிகளில் கடமை செய்யும் மருத்துவ மாதர்களுக்கு இருப்பிட வசதியளிக்கப்பட வேண்டும்.

20 வருடம் சேவை பூர்த்தி செய்தவர்களுக்கு பரீட்சைகள் எதுவுமின்றி தரம் ஒன்றிற்கு உயர்த்தப்பட வேண்டும் என்பனவாகும்.

அடுத்த மாதம் 3ஆம் திகதி

# புதிய சுற்று நிருபம்

(யாழ்ப்பாணம்)

# ஆய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் முகாமைத்துவப் பட்டதாரிகளாக தற்போது ஆய்வுகளில் ஈடுபட்டு வரும் முப்பத்தைந்து முகாமைத்துவ பட்டதாரிக

# மந்திகை ஆஸ்பத்திரி குறைபாடுகள் நீக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் நிலவும் பற்றாக்குறைகள், சீர் கேடுகளை நீக்கி வைத்தியசாலை நன்கு செயற்படுவதற்கு என்னாலான சகல நடவடிக்கைகளையும் நான் மேற்கொண்டுள்ளேன்.

நாட்டில் ஏற்பட்டுள்ள டாக்டர் பற்றாக்குறைகளால் வைத்தியசாலைக்குத் தேவையான டாக்டர்களைப் பெற்றுக்கொள்வதற்கு பெருஞ்சிரமங்கள் ஏற்பட்டுள்ளன நோயாளர்கள் நலன்களைப் பாதுகாப்பதற்கு இயன்றளவு கவனம் செலுத்தப்படும''

இவ்வாறு, பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் திரு. என். கனகசபை குறிப்பிட்டார்,

வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் டாக்டர். எஸ். கதிரவேற்பிள்ளை (மாவட்ட வைத்திய அதிகாரி) தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய ...கம் சிறப்பாக இயங்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட வைத்திய அதிகாரிக்கு பணிக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையின் ஒத்துழைப்புடன் வைத்தியசாலை நிர்வாகம் நன்கு இயங்குமாயின் இவ்வைத்தியசாலையின் பற்றாக்குறைகள் குறைபாடுகளுக்குத் தீர்வுகாணமுடிவதுடன் நோயாளர்களும் பலத்த நன்மைகளைப் பெற முடியும் வைத்தியசாலையின் அபிவிருத்திகருதி வைத்தியசாலையின் நிர்வாகம் கோரும் கோரிக்கைகளுக்கு நான் உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன்.

பிரிட்டிஷ் சிறுவர் நிலையத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மின் இயந்திரத்தை விரைவில் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சினால் இவ் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ள எக்ஸ்றே இயந்திரத்தைப் பொருத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய மின் அபிவிருத்தி வேலைகளுக்கான திட்டமதிப்பீடுகள் இன்னமும் வந்து சேரவில்லை.

இத்திட்டமதிப்பீடுகள் ...

இக் கூட்டத்திலே சமூகமளித்திருந்த விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மருத்துவப் பிரிவு உறுப்பினர் வைத்திய சாலையில் நிலவும் சுகாதாரச் சீர்கேட்டின் உச்சக்கட்டத்தையும், நிர்வாகச் சீர் கேடுகள், ஊழியர்களின் ஒழுங்கற்ற நடவடிக்கைகள் பற்றிச் சுட்டிக்காட்டி இவ் வைத்தியசாலையில் நிலவும் நிர்வாகச் சீர்கேட்டை உடனடியாகக் களைந்து நோயாளர்களுக்குச் சிறந்த சேவை வழங்க யாழ் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மிகக்கண்டிப்பாகக் கேட்டுக் கொண்டார்.

வைத்தியசாலை கழிவகற்றும் கான்களை சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு நேரிற்கூட்டிச் சென்று காட்டி வைத்தியசாலை முன்புற கான்களில் கூட நுளம்புகள் உருவாகிக்கொண்டிருப்பதை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மருத்துவப்பிரிவு உறுப்பினர் கடுமையாகக் கண்டித்தார்.

அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள், அண்மையில் சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்தைச் சந்தித்த போது அமைச்சர் யாழ். மாவட்ட சுகாதார

சமாக வைத்திருந்த ... டம் மேலதிக அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது.

மேற்படி தலைமாவட்ட புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளர் திரு சல்வின் ஐரகனியேஸ் தெரிவித்தார்

வாகரை நடமாடும் செயலகத்தில் மூவரிடமும், வடமுனையில் ஒருவரிடமும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்

இவற்றின மூலம் இவர்கள் மேலதிகமாக நிவாரணம் பெறவிருந்தும் தடைப்பட்டுள்ளது.

## புதிய சுற்று நிருபம்

(யாழ்ப்பாணம்)

அரிசி மாவு, ஆட்டாமா, றவை போன்ற உணவு பொருட்கள் என்பவற்றை கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்யும் பொழுது வழமையாக செலுத்தி வரும் நூற்றுக்கு ஒரு சதவீத வரியை இனிமேல் செலுத்த தேவையில்லை என உணவு ஆணையாளர் தமது சுற்றுநிருபம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்குப் பதிலாக காசோலைகள் மா அரிசி ஆகியவற்றின் பெறுமதியை மட்டும் கணக்கிட்டு உணவு கட்டுப்பாட்டு பிரிவுக்கு அனைத்து கூட்டுறவு சங்கங்களும் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

(லோ)

## மருத்துவ மாதர் சங்கத்தின் தீர்மானங்கள் முன்வைப்பு

(சாவகச்சேரி)

அரசாங்க மருத்துவ மாதர் சங்கப் பொதுக் கூட்டத்தில், சங்கம் ஐந்து கோரிக்கைகளை முன் வைக்கவுள்ளதாக முன்னறிவித்தல் கொடுத்துள்ளது.

இச்சங்கத்தின் தலைவி திருமதி கே இரத்தினம் ஊடாக, செயலாளர் திருமதி எஸ் . ரமலிங்கம் இக்கோரிக்கைகளை சமர்ப்பிப்பார்.

அக்கோரிக்கைகளாவன மருத்துவ மாதர்களுக்கு சம்பள உயர்ச்சி வழங்கப்படவேண்டும். இப்பகுதிகளிலுள்ள வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும்.

20 வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் உடனடியாக தரம் உயர்த்தப்பட வேண்டும்.

பிரசவ விடுதிகளில் கடமை செய்யும் மருத்துவ மாதர்களுக்கு இருப்பிட வசதியளிக்கப்பட வேண்டும்.

20 வருடம் சேவை பூர்த்தி செய்தவர்களுக்கு பரீட்சைகள் எதுவுமின்றி தரம் ஒன்றிற்கு உயர்த்தப்பட வேண்டும் என்பனவாகும்.

அடுத்த மாதம் 3ஆம் திகதி யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி மண்டபத்தில் இந்த மருத்துவ மாதர் சங்கப் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது. (35)


**தேவை**

**பெண் ஆங்கில தட்டெழுத்தாளர்**

சிறந்த ஆங்கில அறிவும் அனுபவமும் உள்ளவராக இருக்க வேண்டும். 22- 05- 90 செவ்வாய்க்கிழமை காலை நேரில் சமுகம் கொடுக்கவும்.

**கிளீன் கட்**

இல 239, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(B-950)



கோடை வெயிலின் கொடுமைக்கு
ஸ்ஸ் இதோ குளுமை தருகிறது...
சென் பீற்றர் நெல்லிரசம்

இளவேனிற் காலத்தில்
உங்கள் தணியாத தாகத்தையும் தீர்க்கும்
**சிறந்த** உள்ளூர் உற்பத்தி
சென் பீற்றர் நெல்லிரசம்...

சந்தைப்படுத்துவோர்:-
ஜோ எக்கட்டன்
செனித் மார்க்கட்டிங்
அட்வர்டைசிங் சிஸ்டம்ஸ்
19/ 3 கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

கையிருப்பாளரும், ஏக விநியோகஸ்தரும்:

**சிவகுமார் ஸ்ரோர்**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(B-995)


... மா அதிபர் குறிப்பிட்டார்.

றாக்கிங் என்ற பெயரில் மாணவிகளைத் தொந்தரவு படுத்தி இம்சிக்கிறார்கள் என்றும் தமக்குத் தகவல் வழங்கிய ஒருவர் றாக்கிங் செய்து குளத்தில் தள்ளி சேற்றில் நீந்தும்படி கட்டாயப் படுத்தியுள்ளார்கள் என்றும் அமைச்சர் ரஞ்சன் கூறினார்.

## ஆய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் முகாமைத்துவப் பட்டதாரிகளாக தற்போது ஆய்வுகளில் ஈடுபட்டு வரும் முப்பத்தைந்து முகாமைத்துவ பட்டதாரிகளும் தற்போதுயாழ். மாவட்டத்தில் 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் மூலவள ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுடைய ஆய்வுப் பயிற்சி நெறி இவ்வருடம் மார்ச் மாதத்திலிருந்து தொடங்கி மே மாத இறுதியுடன் முடிவடையும் (லோ)

... பாதுகாப்பதற்கு ... கவனம் செலுத்தப்படும்''

இவ்வாறு, பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் திரு. என். கனகசபை குறிப்பிட்டார்.

வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் டாக்டர். எஸ். கதிரவேற்பிள்ளை (மாவட்ட வைத்திய அதிகாரி) தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் திரு. கனகசபை குறிப்பிட்டதாவது

இவ் வைத்திய சாலையில் பல்வேறு வகையான பற்றாக் குறைகள், சீர்கேடுகள் நிலவுவதாகப் பலத்த புகார்கள் செய்யப்பட்டுள்ளன. இவ் வைத்தியசாலையின் நிர்வா...னுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன்.

பிரிட்டிஷ் சிறுவர் நிலையத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மின் இயந்திரத்தை விரைவில் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சினால் இவ் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ள எக்ஸ்றே இயந்திரத்தைப் பொருத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய மின் அபிவிருத்தி வேலைகளுக்கான திட்டமதிப்பீடுகள் இன்னமும் வந்து சேரவில்லை.

இத்திட்டமதிப்பீடுகள் வந்து சேர்ந்ததும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வைத்தியசாலையின் தண்ணீர் விநியோகம், கழிவு நீர் அப்புறப்படுத்துதல் ஆகியவற்றில் உள்ள குறைகளை நிவர்த்தியாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

... கேட்டுக் கொண்டார்.

வைத்தியசாலை கழிவகற்றும் கான்களை சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு நேரிற்கூட்டிச் சென்று காட்டி வைத்தியசாலை முன்புற கான்களில் கூட நுளம்புகள் உருவாகிக்கொண்டிருப்பதை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மருத்துவப்பிரிவு உறுப்பினர் கடுமையாகக் கண்டித்தார்.

அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள், அண்மையில் சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்தைச் சந்தித்த போது அமைச்சர் யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு விடுத்த உத்தரவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டன பற்றிய பல கேள்விகளையும் அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் பணிப்பாளரிடம் கேட்டனர். (25)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலிகள்

நள்ளிரவில்வந்த நயவஞ்சகத் துரோகிகளின் குண்டுகளுக்கிரையான ஏழாலை மண்ணின் இருசகோரதரிகளை மறவாது

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலிகள்**





| சிவஞானவதி சுப்பிரமணியம் | செல்வராணி உருத்திரசிங்கம் |
|---|---|
| 1944- 2- 11 | 1946- 7- 21 |

திதி- 21- 5- 90

இவரின் பிள்ளைகளாகிய
ஸ்ரீமுருகன், பாலமுருகன்
திருமுருகன், சாந்தி

ரவீந்திரன், ரவிசங்கர்
ரவிநந்தன், ரவிகுமார்
ரவி வர்மன்

உற்றார் உறவினர் சகோதரர்
நண்பர்கள்

ஏழாலை வடக்கு
ஏழாலை.

(R-485)

## இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் பயிற்சி வகுப்பு

(முள்ளியவளை)

முல்லைத்தீவுப் பிரதேச இளைஞர் யுவதிகளுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு பயிற்சி வகுப்புக்கள் பதினாலாம் திகதி தொடக்கம் பதினாறாம் திகதி வரை முள்ளியவளைக் கமநல சேவைகள் நிலையத்தில் நடைபெற்றன.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் இதனை அங்குரார்பணம் செய்து வைத்தார். சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் வே. கந்தசாமி (பரந்தன்), வடபிராந்திய தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குனர் திரு. அ. நாகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சி வகுப்புக்களின் விரிவுரைகளை கைத்தொழில் அபிவிருத்திச்சபை மாகாண முகாமையாளர் திரு. எஸ். சோமசுந்தரம் ஐயர், இளைஞர் சேவை அதிகாரி திரு. கே. யூ. கோடீஸ்வரன், நிஸ்கோ மாவட்ட முகாமையாளர் திரு. தி. சிவதட்சணாமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவில் இருந்தும் சனசக்தி நன்மை பெறும் குடும்பங்களில் குறைந்தது ஒருவரை எடுத்து பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி வகுப்புக்களின் பின் தாம் விரும்பும் சுய தொழில் செய்வதற்கு சிறுதொழில், சிறுகடன் திட்டத்தின் கீழ் வங்கியில் இருந்து கடனுதவி பெற்றுக் கொடுப்பதற்கு உதவுவதாக இளைஞர் சேவைமன்ற உதவி அதிகாரி அவர்கள் தெரிவித்தார் இந்த வகுப்புக்களுக்கு முல்லைப் பிரதேச இளைஞர், யுவதிகள் பெருமளவில் ஆர்வத்துடன் பங்கு பற்றினார்கள்.

முல்லை மாவட்டத்தின் சகல பகுதிகட்கும் இத்திட்டம் பரவலாக்கப்பட்டுள்ளது.

## விபரங்கள் சேகரிப்பு

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை கிராம சேவையாளர் பிரிவில் வன்செயல்களின் போது இறந்தவர்கள்மற்றும் நோய் வாய்ப்பட்டு திடீரென இறந்தவர்கள் கொலை செய்யப்பட்டவர்கள், காணாமல் போனவர்கள் போன்றவர்களின் விபரங்களை கொழும்புத்துறை கிராமசேவையாளர் எஸ். எம். டொமினிக் திரட்டி வருகிறார்.

தகுதியானவர்கள் தன்னுடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (34)

## சிந்தனைக்கு

கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறுபட்டார் தொடர்பு

- திருக்குறள்


# ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 21 - 05 - 90

தொலைபேசி

ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

த. பெ. எண். 05


## நல்ல சமயமடா நழுவ விடுவாயோ?

''உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்'' என்பது வள்ளலார் பாடல்.

பிரேமதாசா அரசு உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறதா, உண்மையாக விசுவாசமாக நேர்மையாக நடந்து கொள்கிறதா என்பதை உரைத்துப் பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் வாய்க்கவிருக்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் நிரந்தரத் தீர்வு காண முடியுமென்று பிரேமதாசா அரசு கூறியது.

எந்தப் பிரச்சினையையும் வன்முறைகளால் தீர்த்துவிட முடியாது பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்று திரு.ரணசிங்க பிரேமதாசா இலங்கை ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின் கூறி வந்தார்.

ஜே.வி.பி. என்ற ஜனதா விமுக்திப் பெரமுனையைப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஜனாதிபதி பிரேமதாசா அழைப்பு விடுத்தார்.

இதை ஜே வி.பி. ஏற்றுக்கொள்ளவில்லை. மீண்டும் மீண்டும் பிரேமதாசா ஜே.வி.பிக்கு நட்புக்கரம் நீட்டினார். அதை ஜே. வி. பி. பற்றிக்கொள்ளவே இல்லை. பிரேமதாசா ஆயுதபலத்தைப் பாவித்தார். ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜயவீராவும் அவரது சகாக்களும் அழிக்கப்பட்டனர்.

ஜே. வி. பி. அழித்து ஒழிக்கப்பட்டுவிட்டது என்று பிரேமதாசா அரசு கூறியது. தென்னிலங்கையில் வன்செயல்கள் முற்றுப்பெற்றுவிட்டதாக அரசு மகிழ்ந்தது. ஆனால் ஜே. வி. பி. புதிய தலைமையில் புத்துயிர் பெற்றிருக்கிறது. வன்செயலை வன்செயலால் ஒழிக்க முடியாது என்பது நிரூபிக்கப்பட்டு வருவது வேறுவிஷயம். ஜே. வி. பி. விவகாரம் சிங்கள இளைஞர்கள் சம்பந்தப்பட்டது.

பேச்சுவார்த்தைமூலம் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பிரேமதாசா அழைப்பு விடுத்தார். காட்டுக்குள் சென்றாவது தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசத்தயாராக இருப்பதாக ஜனாதிபதி பிரேமதாசா அறிவித்தார்.

பிரேமதாசா நீட்டிய நட்புக்கரம் உண்மையிலேயே நட்புக்கரம்தானா அல்லது நச்சுக்கரமா என்பதைப் பரிசோதிக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை விடுதலைப்புலிகள் அறிய முன்வந்தனர்.

பிரேமதாசாவுக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்களுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள்

# நியாயமான தீர்வில்லையேல் மீண்டும் போர்

### அன்ரன் பாலசிங்கம்

(பருத்தித்துறை)

'இலங்கை அரசின் அணுகு முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங் களை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை அரசு தமிழினத் திற்கு நீதி வழங்கத் தவறு மாயின் தமிழினத்தைப் பாது காப்பதற்காக தமிழீழ விடு தலைப் புலிகள் ஆயுதமேந்திப் போராடும். தமிழினத்தின் நிலைப்பாடு பற்றி ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் நன்கு விளக்கியுள்ளனர்.'



இவ்வாறு விடுதலைப் புலி களின் மக்கள் முன்னணியின ரும் கலை கலாசார பிரிவின ரும் இணைந்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடாத்திய தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியிலும் கலை விழாவிலும் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ விடு தலைப் புலிகள் இயக்க அர சியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் குறிப் பிட்டார். இவ்விழாவிற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க வடமராட்சிப் பொறுப் பாளர் திரு. சூசை தலைமை தாங்கினார். விடுதலைப் புலி கள் மக்கள் முன்னணி வடம ராட்சி இணைப்பாளர் திரு. குணம் வரவேற்புரை நிகழ்த் தினார்.

விழா ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைக்காய்த் தியாகங் கள் புரிந்து வீரமரணம் அடைந்த போராளிகளுக்கும் இறந்த பொதுமக்களுக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக இரண்டு நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த இவ்விழாவிலே தொடர்ந்து உரையாற்றிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டதாவது:

இன்று இலங்கை அரசின் அணுகுமுறைகளில் சில மாற் றங்கள் ஏற்பட்டிருப்பதனால் பொதுமக்கள் மத்தியில் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுமா? பிரச்சினைகள் தீருமா? மேலும் பிரச்சினை கள் ஏற்படுமா? என்ற சந் தேகங்கள் ஏற்பட்டிருக்கின் றன. மக்கள் மத்தியில் ஏற் பட்டுள்ள இச்சந்தேகங்களுக்

வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்தது. இந்திய இராணு வம் தமிழீழத்தில் அட்டூழியங் களை மேற்கொண்ட அதே நேரத்தில் தென் இலங்கை யில் அரசியல் பிரச்சினைகள் பயங்கர ரூபங்களை எடுத்துக் கொண்டிருந்தன.

இந்நிலையிலே இலங்கை அரசு பேச்சுவார்த்தைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடாத்தி நோக்கத்தில் வெற்றி கிடைத்தது. தமிழீழ மண் ணிலிருந்து இந்திய இராணு வம் வெளியேற வேண்டி ஏற் பட்டது. இந்தியா இலங்கை யிலிருந்து வெளியேறியதனால் இலங்கை அரசுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக் களின் அடிப்படைப் பிரச் சினைகள் பற்றிய பேச்சு வார்த்தைகளை ஆரம்பித் தது.

இலங்கை அரசாங்கம் மாகாண சபையைக் கலைத்து நிர்வாகத்தை தமிழீழ விடு தலைப் புலிகளுக்கு வழங்கு தல் பற்றியும், 6ஆவது ஷரத்தை நீக்குதல் பற்றியும், தேர்தலை நடாத்துவது பற்றி யும் பேசப்பட்டது. இதனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மக்கள் ஜன நாயக கட்சியாகப் பதிவு செய்ய ஏற்றுக்கொள்ளப்பட் டது. இதனால் கிராமங்கள் தோறும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கான அணி திரட்டப்பட்டு வருகிறது.

**அணுகு முறையில் மாற்றம்**

இதனால் தமிழீழ விடு தலைப் புலிகளின் முக்கியத் தைக் குறைப்பதற்காக தேர் தலை நடாத்தி தமிழீழ விடு தலைப் புலிகள் நிர்வாகத் தைக் கைப்பற்றுவதைத் தவிர்த்து நீண்டகால அர சியல் சூன்ய நிலையை உரு வாக்கி தட்டிக்கழித்து தமி ழீழ விடுதலைப் புலிகளின் இராணுவபலத்தைக் குறைக்க முடியும் என எதிர்பார்க்கப் படுகிறது.

**கடைசிச் சந்தர்ப்பம்**

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழின விடுதலைக்காக இலங்கை அரசாங்கத்திற்கு மீண்டும் ஒரு இறுதிச் சந்தர்ப் பத்தை வழங்குமுகமாக எமது மக்களுக்கு நீதியான தீர்வு ஒன்றை வழங்குமாறு கோரு கின்றோம். தமிழீழ மக்களுக்கு நீதியான தீர்வு கிடைக்காத பட்சத்தில் தமிழீழ மக்களுக் காக நாம் ஆயுதமேந்திப் போராடுவோம். இது ஜனாதி பதி பிரேமதாஸாவிற்கு நன்கு விளங்கும்.

தமிழீழ மக்களுக்குத் துரோ கம் இழைத்து தற்போது ஒளித்திருக்கும் ஈ. பி. ஆர். எல். எவ் போன்ற இயக்கங் களை சர்வகட்சி மகாநாட் டிற்கு அழைத்து ஈ. பி. ஆர். எல். எவ் ஐ தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண பேச்சுவார்த்தை நடாத்தி தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியத்துவத்தை இழக்கச் செய்ய அனுமதியளிக்க முடி யாது. ஈ. பி. ஆர். எல். எவ் உடன் பேச்சுவார்த்தை மட்டுமல்ல, இக்கூலிக் கும்பல் களுக்குச் சிங்கள இராணுவ முகாம்களில் பயிற்சிகள் வழங் கப்படுவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. இது ஒரு ஆபத்தான கட்டமாகும். எனவே தமிழீழ மக்கள் விழிப் பாக இருக்க வேண்டும். இலங் கையரசின் அணுகுமுறைகளின் மாற்றங்களை மிக நுணுக்க மாக அவதானிக்க வேண்டும். திருக்கோணமலை, பலாலி, கோட்டை உட்பட பல இடங் களில் இலங்கை இராணுவ முகாம்கள் பலப்படுத்தப் படுகின்றன. விமானங்கள் வேவு பார்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. துரோகக் கும்

பல்களுடன் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

சிங்கள அரசிடம் நீதி கேட் போம். நீதி வழங்க மறுத்து இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாயின் தமிழ்ஈழ மக்களின்பாதுகாப்பு நலன்களைக் கருதி தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக் கும். 17ஆண்டுகளுக்குமேலாக இரத்தம் சிந்தி தியாகங்களை மேற்கொண்டுவரும் தமிழினத் தின் நிம்மதி, விடுதலை, சுதந் திரத்திற்காகவே தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் போராடும் புனித இயக்கம் ஆகும்.

மக்கள் முன்னணி யாழ். மாவட்ட கலை, கலாசாரப் பொறுப்பாளர் செல்வி சீதா, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பொறுப் பாளர் கவிஞர் புதுவை இரத் தினதுரை, விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரதி அமை ப்பாளர் திரு. செங்கதிர், வட மராட்சி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப் பாளர் செல்வி லூசியா, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப்பிரமுகர் தேவன் அண்ணா ஆகியோரும் உரை யாற்றினர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நெல்லியடிப்பொறு ப்பாளர் திரு.குணபால் நன்றி யுரை வழங்கினார். (25)

## சர்வோதய வகுப்பு மரத்தின் கீழ்


(வந்தாறுமூலை)

## குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி:)

**பஸ் வண்டியொன்றினுள் உள்ளபோது......**

உடனடியாக பஸ்ஸினை நிறுத்தச் செய்து வெளியே இறங்கி திறந்த வெளியில் உள்ளபோது செய்ய வேண் டியதைப் போல் குப்புற விழுந்து படுக்கவும்.



**காரொன்றினுள் உள்ளபோது......**

வீதியின் இடதுபக்க ஓரமாககாரை நிறுத்தி, ஜன்னல் களை திறந்தபடியேவிட்டு, கார்க்கதவுகளைபூட்டாமல் சாவியை அதற்குரிய இடத்தில் செருகியபடியே விட்டு விட்டு. காரினை விட்டு இறங்கி ஓடிச் சென்று வீதி யொன்றில் உள்ள போது செய்வதைப் போல் குப்புறப் படுக்க வேண்டும். கார் திறந்தபடியே சாவியுடன் இருப்பதனால், தற்செயலாய் நீங்கள் காயமுற்றிருந் தால் உங்களை வேறு யாராவது மருத்துவமனைக்குக்

பிரமதாசா அரசு கூறியது. தென்னிலங்கையில் வன்செயல்கள் முற்றுப்பெற்றுவிட்டதாக அரசு மகிழ்ந்தது. ஆனால் ஜே. வி. பி. புதிய தலைமையில் புத்துயிர் பெற்றிருக்கிறது. வன்செயலை வன்செயலால் அழிக்க முடியாது என்பது நிரூபிக்கப்பட்டு வருவது வேறுவிஷயம். ஜே. வி. பி. விவகாரம் சிங்கள இளைஞர்கள் சம்பந்தப்பட்டது.

பேச்சுவார்த்தைமூலம் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பிரேமதாசா அழைப்பு விடுத்தார். காட்டுக்குள் சென்றாவது தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசத்தயாராக இருப்பதாக ஜனாதிபதி பிரேமதாசா அறிவித்தார்.

பிரேமதாசா நீட்டிய நட்புக்கரம் உண்மையிலேயே நட்புக்கரம்தானா அல்லது நச்சுக்கரமா என்பதைப் பரிசோதிக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை விடுதலைப்புலிகள் அறிய முன்வந்தனர்.

பிரேமதாசாவுக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்களுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நல்ல சூழ்நிலையில் ஆரம்பமாகின.

அமைதிப்படை என்று வந்து ஆக்கிரமிப்புப்படையாக மாறிக்கொண்டு வந்த இந்திய இராணுவத்தை இலங்கையிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்பதில் அரசுக்கும் புலிகளுக்கும் இரண்டு கருத்து இருக்கவில்லை.

இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேறுப் பட்டதுடன் அரசு - புலிகளின் முதல் கட்டப் பேச்சு வெற்றிகரமாக நிறைவெய்தியது.

அடுத்த கட்டம் விடுதலைப் புலிகள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்வதற்கு வசதியாக இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவதென்றும் வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைத்துப் புதிய தேர்தலை நடத்துவதுமாகும்.

இவையிரண்டையும் நிறைவேற்றுவதாகப் பேச்சுவார்த்தைகளில் அரசு தரப்பு உறுதியளித்திருந்தது.

இந்தியப்படை வெளியேற்றத்துடன் வடக்கு கிழக்கு மாகாண சபை முதல்வரும் உறுப்பினர்கள் பலரும் வெளியேறிவிட்டனர். மாகாணசபை செயலிழந்திருக்கிறது. ஆனாலும் மாகாணசபை இன்னமும் கலைக்கப்படவில்லை.

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு அரசு எந்த முயற்சியையும் மேற்கொள்ளவுமில்லை. அதேவேளை இந்தியாவுடன் துணை நின்ற இயக்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்திருக்கிறது.

அரசின் இந்தச் செயல்கள் பிரேமதாசா நீட்டிய நட்புக்கரத்தில் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

''தொழுதகையுள்ளும் படையொடுங்கும்-
ஒன்னார் அழுத கண்ணீருமனைத்து''

என்ற வள்ளுவர் வாக்குப்படி நேசக்கரத்திற்குள் ஆயுதம் ஒளித்திருக்கிறதா என்ற ஐயத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

என்றாலும் பிரேமதாசா அரசின் தூய்மையைப் பரிசோதிக்கவும் கடந்தகால அனுபவங்களிலிருந்து தென்னிலங்கை அரசியல்வாதிகள் பாடம் படித்திருக்கிறார்களா என்பதைப் பரிசோதித்துப் பார்க்கவும் நல்லதொரு சந்தர்ப்பத்தை ஈழவர் ஜனநாயக முன்னணி ஏற்படுத்துவதற்கு முன்வந்திருக்கிறது.

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்று ஈழவர் ஜனநாயக முன்னணி பாராளுமன்றத்தில் தனிப்பட்ட அங்கத்தவர் பிரேரணை கொண்டுவரவிருக்கிறது.

ஆறாவது திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் ஜே. ஆர். அரசு கொண்டுவந்தபோது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதை அப்போது கண்டித்தது.

இன்று அதை நீக்கக்கோரும் பிரேரணைக்கு சுதந்திரக்கட்சி என்ன செய்யப்போகிறது? ஆறாவது திருத்தத்தை நீக்குவதாக கூறிய அரசு எப்படி வாக்களிக்கப்போகிறது?

நாட்டின் அமைதி இப்பிரேரணையில்தான் தங்கி இருக்கிறதென்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

---

அஞ்சலி செலுத்துமுகமாக இரண்டு நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த இவ்விழாவிலே தொடர்ந்து உரையாற்றிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டதாவது:

இன்று இலங்கை அரசின் அணுகுமுறைகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதனால் பொதுமக்கள் மத்தியில் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுமா? பிரச்சினைகள் தீருமா? மேலும் பிரச்சினைகள் ஏற்படுமா? என்ற சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இச்சந்தேகங்களுக்கான உண்மை நிலையை மக்களுக்கு விளக்கி இன்றைய அரசியல்சூழ்நிலையை வெளிப்படுத்த வேண்டுமென தலைவர் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

## இன்றைய நிலை

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரே நேரத்தில் இந்திய இராணுவம், இலங்கை இராணுவம் இலங்கையிலிருந்த ஐந்து ஆயுதக் குழுக்கள் ஆகியனவற்றை எதிர்த்து தனித்து நின்று போராடிய காலகட்டத்திலேயே இலங்கை அரசானது தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தது.

இந்திய இராணுவம் தமிழீழ மண்ணிற்கு வந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போராடி எதையும் சாதிக்க முடியாமல் இருந்தமையினால் இலங்கையிலே நிரந்தரமாக இந்திய இராணுவம் கால் ஊன்றி விடும் என அச்சம் கொண்டமையினாலேயே இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதற்காக ஜனாதிபதி பிரேமதாசா தலைமையிலான ஸ்ரீலங்கா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

இலங்கை அரசாங்கம் மாகாண சபையைக் கலைத்து நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்குதல் பற்றியும், 6ஆவது ஷரத்தை நீக்குதல் பற்றியும், தேர்தலை நடாத்துவது பற்றியும் பேசப்பட்டது. இதனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மக்கள் ஜனநாயக கட்சியாகப் பதிவு செய்ய ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனால் கிராமங்கள் தோறும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கான அணி திரட்டப்பட்டு வருகிறது.

## அணுகு முறையில் மாற்றம்

ஆனால் சமீபகாலமாக இலங்கை அரசின் அணுகு முறையில் மாற்றமேற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி சுமுகமான தீர்வு ஒன்றைக் காணுவதை விடுத்து புதிய அணுகுமுறையை இலங்கை அரசு கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளது. பேச்சுவார்த்தைகளால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கீழ் வந்துவிட்டால் பின்னர் தமிழ் ஈழம் அமைந்துவிடும் என அஞ்சும் சிங்கள துவேசங் கொண்டவர்களின் நடவடிக்கைகளினால் ஜனாதிபதி பிரேமதாஸ ஆட்டம் கண்டார். எதிர்க்கட்சிகள் விசமத்தனமான பிரசாரங்களைச் செய்தன. இதனால் சிங்கள மக்கள் பயந்தனர். சிங்கள பௌத்தபீடம் விடுதலைப் புலிகளை நம்பக்கூடாதென ஜனாதிபதி பிரேமதாஸாவை எச்சரித்தது. சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான விசமத்தனமான பிரசாரங்களை மேற்கொண்டன. பிரேமதாஸா மெல்ல மெல்ல நிலை வழுகலானார்.

ஆபத்தான கட்டமாகும். எனவே தமிழீழ மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். இலங்கையரசின் அணுகுமுறைகளின் மாற்றங்களை மிக நுணுக்கமாக அவதானிக்க வேண்டும். திருக்கோணமலை, பலாலி, கோட்டை உட்பட பல இடங்களில் இலங்கை இராணுவ முகாம்கள் பலப்படுத்தப் படுகின்றன. விமானங்கள் வேவு பார்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. துரோகக் கும்

---

# நிபந்தனையை நீக்குமாறு சமாசத்தில் தீர்மானம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச்சங்கங்களினால் வழங்கப்படும் குறைந்த வீத வட்டியுள்ள கடனுக்கு ஐந்து வீதம் பங்குப்பணம் வைப்புச் செய்ய வேண்டுமென்றுள்ள நிபந்தனையை நீக்க வேண்டுமென்று சமாச வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட சமாசம் சம்மேளனத்தின் அங்கத்துவ சமாசமாக இருந்து வருகின்றது என்றும் சம்மேளனம் இணைந்த தேசிய அனமப்பாக வெளிநாட்டிற்கு இனம் காட்டிப் பெறுகின்றநிதியுதவிகளைத் தனது மூலதனத்திற்கு மட்டும் பயன்படுத்துகின்றது.

சமாசத்திற்கு வழங்கிய புனரமைப்பு நிதிக்கு 3 வீத வட்டியும் 5 வீதப் பங்கும் அறவிடப்படுவதுடன் ஊழியர்களுக்கான சம்பளக் கடனுக்கு 5 வீதப் பங்கு அறவிடப்படுவது சமாசத்தை சுரண்டும் செயல்.

இது சுரண்டலில் இருந்து சமாசத்தைபாதுகாக்க வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

அநேக உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் சமுகம் கொடுத்துப் பல கருத்துரைகள் வழங்கினார்கள். (24)

---

## சர்வோதய வகுப்பு மரத்தின் கீழ்

(வந்தாறுமூலை)

சர்வோதய மாவட்ட நிலையத்தின் கீழ் இயங்கிவரும் சுமார் இரு நூறுக்கும் மேற்பட்ட பாலர் பாடசாலைகள் கட்டிட வசதிகள் இன்றி மரத்தின் கீழ் நடைபெறுவதை காணக்கூடியதாக உள்ளது. எனவே இதனை கூடிய விரைவில் இப்பாலர் பாடசாலைக்கான கட்டிட வசதியினை ஏற்படுத்தி இப் பாலர்களின் கல்வி மேம்பாட்டை உயர்த்த சர்வோதய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பகுதி வாழ் மக்கள் கேட்கின்றனர் (29)

## பளை ஆஸ்பத்திரியில் சிரமதானம்

(சாவகச்சேரி)

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரதேச சுகாதாரப்பொறுப்பாளர் திரு. செல்வராஜா தலைமையில் பளை ஆஸ்பத்திரியில் சிரமதான வேலைகள் நேற்று இடம்பெற்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரும் பச்சிலைப் பள்ளிப் பொது மக்களும் இணைந்தே சிரமதான மூலம் பளை ஆஸ்பத்திரி வளவை துப்பரவு செய்து வேலிகள் அமைத்தனர். (35)

## சிரமதானம்

(வவுனியா)

கடந்த ஒரு மாதத்திற்குள் தேசிய இளைஞர் சேவைமன்றத்தின் வவுனியா கிளை இம் மாவட்டத்தில் இரு வீதிகளைத் திருத்தி அமைத்துள்ளது.

கோவில்குளம் நடேசபிள்ளை ஒழுங்கை கனகராயன் குளம், மன்னகுளம் வீதி ஆகிய பாதைகளையே மேற்படி தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வவுனியா கிளை அபிவிருத்தி செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

பொதுமக்களின் சிரமதான முயற்சியை பயன்படுத்தி இந்த மன்றம் புனரமைப்பு வேலை செய்துள்ளது. (தி)

---



### காரொன்றினுள் உள்ளபோது......

வீதியின் இடதுபக்க ஓரமாககாரை நிறுத்தி, ஜன்னல்களை திறந்தபடியேவிட்டு, கார்க்கதவுகளைபூட்டாமல் சாவியை அதற்குரிய இடத்தில் செருகியபடியே விட்டுவிட்டு. காரினை விட்டு இறங்கி ஓடிச் சென்று வீதியொன்றில் உள்ள போது செய்வதைப் போல் குப்புறப் படுக்க வேண்டும். கார் திறந்தபடியே சாவியுடன் இருப்பதனால், தற்செயலாய் நீங்கள் காயமுற்றிருந்தால் உங்களை வேறு யாராவது மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கு இலகுவாயிருக்கும்.

### மாட்டு வண்டி ஒன்றினுள் உள்ளபோது......

உடனடியாக கீழே குதித்து ஒரு சில யார் ஓடிச் சென்று குப்புற விழுந்து படுங்கள். சிறிது நேர அவகாசம் கிடைக்குமாயின் மாடுகளை அவிழ்த்து அருகிலுள்ள பெரிய மரமொன்றில் கட்டி விடவும்.

### மந்தைகளுக்கான பாதுகாப்பு......

மந்தைகளை அருகிலுள்ள காணியொன்றிலோ அல்லது பாவனையற்ற மண்டபங்களிலோ கற்றிலும் அடைத்து, சிதறி ஓடாதவாறு உள்ளே விட்டு விடுங்கள்.

மேற்கூறியவை அனைத்தும் குண்டு வீச்சின் பொழுது அருகில் பாதுகாப்புக்குரிய விஷேட அமைப்புக்கள் எதுவும் காணப்படாத போது உங்களது செயல்முறைகளாகும். இனி உங்களது வீடுகளில். கடைகளில், தொழிற்சாலைகளில் உள்ள போது எவ்வகையான விஷேட அமைப்புகளின் மூலம் உங்களைக் காக்க முடியும் எனப் பார்ப்போம்.

முதலில் சாதாரணமாக உள்ள கட்டிடங்கள் ஓரளவாவது வெடிப்பதிர்வுகளில் இருந்து பாதுகாக்கப் படுவதற்கான முறையில் மாற்றி அமைக்கப் படுதல் வேண்டும். இவ்வகையில் மாற்றி அமைக்க எடுக்கும் முயற்சிகள் இப்போதுள்ள சூழ்நிலையில் உங்களை அரச படையினர் விஷேடமாகக் கவனிப்பதற்கு வழி வகுத்து விடும். எனவே அவ்வப்போதுள்ள சூழ்நிலைகளுக்கும், உங்கள் வசதிக்கும் ஏற்றவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

பொதுவாக கட்டிடங்களானவை, குண்டு வீச்சுகளிற்கு எதிராக கட்டப்பட்டவை அல்ல. எனவே வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள் போன்ற மக்களுடன் தினமும் தொடர்புடைய கட்டிடங்கள் குண்டு வீச்சுகளைத் தாங்கக் கூடியவகையில் புனரமைக்கப் படுதல் வேண்டும். புனரமைத்தல் எனும் போது இங்கு பெரியளவு பொருட் செலவில் செய்யப்படுபவற்றை குறிப்பிடவில்லை. இதன் போது இலகுவாகக் கிடைக்கக்கூடியபொருட்களையும்மலிவானவற்றையும்கொண்டு செய்யப்படும் வேலைகளே குறிப்பிடப்படுகின்றன. கட்டிடங்களுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் எனப்படும் போது அவை நேரடியான குண்டு வீச்சுக்கு தாக்குப் பிடிக்கக் கூடியவை என்ற கருத்தைக் கொள்ளலாகாது. சிறிய குண்டுகளும், அருகில் விழுந்து வெடிக்கின்ற குண்டுகளினது வெடிப்பு அதிர்வுகளுக்கும் சிதறு குண்டுகளுக்கும் எதிரான பாதுகாப்பே இங்கு தரப்படுகிறது. இருப்பினும் சில முக்கியமான பொருட்களைக்கொண்டு கட்டடங்கள்போன்றவை விசேடமாக கவனிக்கப்பட்டு, முழுமையான பாதுகாப்புக்கு உட்பட்டவையாக மாற்ற வேண்டியதும் அவசியமாகும்.

(தொடரும்)

Registered as a News Paper at the G. P. O

ஈழநாதம்

# போராட்டத்தில் மக்கள் என்றும் எமது பக்கமே உள்ளனர்

## தமிழீழத்தில் தேனிசைச் செல்லப்பாவின் இறுதி நிகழ்ச்சியில் தினேஷ்

(சாவகச்சேரி)

தமிழீழ மக்களிடமிருந்து தமிழகப் பாடகர் தேனிசைச் செல்லப்பாவும், அவர் கோஷ்டியினரும் பிரியாவிடை பெற்றுக் கொண்டனர். இப் பிரியாவிடை பெற்றுக்கொண்ட சம்பவம் அனைவர் மனங்களையும் உருக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியாகஅமைந்திருந்தது தாயைச் சேய் பிரிவது போன்ற சோக நிகழ்ச்சியாகவும் அது அமைந்திருந்தது.

தமிழகப் புரட்சிப் பாடகர் கவிஞர் தேனிசை செல்லப்பாவினுடைய தேனிசை நிகழச்சி கடைசி நிகழ்ச்சியாக சாவகச்சேரியில் சனிக்கிழமை இரவு இடம்பெற்றது சாவகச்சேரி நகர சபை மைதானத்தில் சுமார் பத்தடி உயர மேடை அமைத்து அதில் அமர்ந்து தேனிசைச் செல்லப்பாவும் அவர் கோஷ்டியினரும் தமது புரட்சிக் கீதங்களின் இசை நிகழ்ச்சிகளை நடத்தினர்.

தமிழீழத்தின் பலபகுதிகளிலிருந்தும் மக்கள் ஜன சமுத்திரம் போல் காட்சியளித்தனர்.

மைதானம் நிறைந்து ஜன சமுத்திரம் அலை மோதியது.

சரித்திரம் காணாத மக்கள் வெள்ளம் நிறைந்திருந்தது'

தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு பாப்பா நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார்.

தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளர் திரு ப.தினேஷ் மங்கள விளக்கை ஏற்றி வைக்க இரு நிமிட மௌன அஞ்சலியினைத் தொடர்ந்து தமிழீழத் தாய் வணக்கத்துடன் கூட்டம் ஆரம்பமானது.

சாவகச்சேரி பிரதேச அமைப்பாளர் திரு. கந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார். தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு. தினேஷ் கலைஞர்கள் பற்றிய அறிமுக உரையை நிகழ்த்தினார். அவர் தமதுரையில்,

''இனிமேல்தான் எமக்கு பெரும் அச்சுறுத்தல்கள் வரப்போகின்றது எமது மக்கள் மிகவும் அவதானமாகவும் உறுதியான மனநிலையுடனும், எந்த நெருக்கடியான காலம் வந்தாலும எமது விடிவுக்காகப் போராடும் எமது விடுதலைப் போராளிகளுடன் தோளோடு தோள் நின்று ஒத்துழைப்பு தரவேண்டும்', என்றார்.

மேலும் அவர் பேசுகையில் எமது மக்கள் எம்முடன் என்றென்றும் ஒத்துழைப்பார்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. எமது மக்கள் ஆயுதப் போராட்டத்தில் மிக மிக உறுதியாக உள்ளனர் என்பது எமக்கு நன்றாகத் தெரியும். ஆகவே எமது இலட்சியத்தை அடைவது நிச்சயம் எனவும் அவர் குறிப்பிட்டுப் பேசினார்.

மேலும் இவ்வைபவத்தில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் கலை கலாசார பிரிவு பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள் பேசும்போது தமிழீழத்தின் எல்லைகளை நிச்சயிப்பதற்காக எமது போராளிகள் இரத்தம் சிந்தி போராடி அதனை விடுவித்து தருவதில் மிக உறுதியாக உள்ளனர். ஆனால் அவ்வாறு எல்லைகள் கண்டு தரப்படும் தமிழீழத்தை ஒரு வளங்கொளிக்கும் பூமியாக, உலகம் போற்றும் தேசமாக மிளிரச் செய்வது புத்திஜீவிகள், கலைஞர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரது கடமையே ஆகும் என்றார்.

தொடர்ந்து தென்மராட்சி இராணுவ பொறுப்பாளர் குணா அவர்கள் தேனிசை செல்லப்பா அவர்களுக்கு தங்கப்பதக்கமும் ஏனைய கலைஞர்களுக்கு மோதிரமும் வழங்கினார். விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்தவர்கள் பின்னணிப் பாடகி சொர்ணலதா அவர்களுக்கும் செல்லப்பாவின் புதல்விக்கும் தங்கச் சங்கிலி வழங்கி கௌரவித்தனர்.

செல்லப்பா அவர்கள் தமிழீழத்தில் வழங்கிய இறுதி நிகழ்ச்சி ஆகிய இந்நிகழ்ச்சியில் தமிழீழ மக்களிடம் இருந்து பலமுறை தமது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டார்.

மேலும் இக்கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பொறுப்பாளர் திரு. பாப்பா அவர்கள் தலைமை தாங்கினார். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிசாவகச்சேரி வட்ட பொறுப்பாளர் கந்தன் அவர்களும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி அமுதினிஉட்பட மற்றும் பலர் உரையாற்றினர். (லோ)

## களிமண் பற்றாக்குறையால் ஓட்டுத்தொழில் பாதிப்பு

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலைக்குப் போதிய களிமண் கிடைக்காததால் ...

... வரப்பட்டது.

இந்த வருடங்களில் இராணுவ நடவடிக்கைகளும் இது குறைவதற்கு ஒரு காரணம் ...

### வண. லோங்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்னாரின் நினைவாக யாழ். புனித சம்பத்தரிசியார் கல்லூரியில் பேச்சுப்போட்டிகள் நடைபெற்றன. இப் போட்டிகளில் வெற்றி பெற் ...

## யாழ் நகரில் மொறிசியஸ் தமிழர் தினம்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையம் நடாத்தும் மொறிசியஸ் தமிழர் தினம் நேற்று மாலை பி.ப. 3.30 மணியளவில் யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் ஆரம்பமானது. திரு. சாந்தன்அதிதிகளைவரவேற்று பேசினார். இராமநாதன் நுண்கலைக் கல்லூரி மாணவிகள்மொறிசியஸ் கீதம் இசைத்தார்கள்யாழ்நகரிலிருந்துவெளிவரும்பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மங்கல விளக்கேற்றிவைத்து விழாவை ஆரம்பித்தார்கள்.

மொறிசியஸ் தமிழ் ஏடுகள் தமிழ் மொழியில் வெளியிட்ட தபால் தலைகள், அவர்களது பண்பாட்டை பிரதிபலிக்கும் ஆவணங்கள் அடங்கிய கண்காட்சியும் இடம்பெற்றது

மொறிசியஸ் தீவில் நடைபெற்ற 7வது உலகத் தமிழாராச்சிபற்றிய வீடியோ காட்சியும் காண்பிக்கப்பட்டது.

மாதம் ஒரு நிகழ்வாக நடைபெறும் இந்த விழாத் தொடர் நேற்று முதல் மூன்று மாதங்களுக்கு இடம் பெறும் இந்த விழாத் தொடரில் அடுத்த மாதம் இடம்பெறுவது மலேசியாவில் கடந்த 6-வது உலகத் தமிழராய்ச்சி மாநாடும் அந்த நாடுபற்றிய கண்காட்சியும்

## பயிற்சி நெறிக்கு வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்களத்தால் நடாத்தப்படும் முறைசாராக் கல்விப்பிரிவில் பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு சில வெற்றிடங்கள் உள்ளன. மோட்டார்ப் பொறித் தொழில், உழவுயந்திரம் பழுது பார்த்தல், கட்புலசாதனங்களாக்கம், பட்டுத்திரை அச்சிடல்,புத்தகம் கட்டுதல், மின் ஒட்டுவேலை, தோற்பொருள் உற்பத்தி, விவசாயத்தொழில் நுட்பம் ஆகிய பயிற்சிநெறிகளில் பங்குகொள்ள விரும்புவோர் தம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு முறைசாராக்கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்தார்.

வேறு பயிற்சி நெறிகளில் பங்குகொள்ளாதவர்கள மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவர் ஒருவர் ஒரு பயிற்சிநெறியில் மட்டுமே பங்குபற்றலாம் எனவும் அவர் கூறினார். (மு

### தமிழீழத்தில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறும் கடையடைப்பு மற்றும் ஹர்த்தாலுக்கு இப்பகுதியிலுள்ள தமிழ் பேசும் மக்கள் பூரண ஒத்துழைப்பும் வழங்க உறுதியளித்திருக்கிறார்கள்.

### தொண்டமான் காங்கிரஸ் கவலை

மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தமக்குமட்டுமே உரிய பிரச்சினை என்று இன்றுவரை திரு. தொண்டமான் தலைமையிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூறி வந்தாலும் திரு. சந்திரசேகரன் தலைமையில் புதிதாகத் தோன்றியுள்ள மலையக மக்கள் முன்னணியும், ஒருலட்சம் தோட்டத் தொழிலாளரை நாடு கடத்துவதற்கு அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளும் ...

### மலையகத் தமிழர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்னரும் இவ்வாறான பிரச்சினைகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைக்கப்பட்டது.

எனவே இப்பிரச்சனையை ஜனாதிபதியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் ...

## மட்டக்களப்பு மாநகரில் குப்பைஅகற்றவாகனமில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபை புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடமிருந்துநிவாரணம் கோரியுள்ள போதிலும் இதுவரை எவ்விதமான உதவிகளும் மாநகர சபைக்கு கிடைக்கவில்லை என்று மாநகரசபை ஆணையாளர் திரு.கே.கார்த்திகேசு தெரிவித்தார்.

இயக்கங்கள், இலங்கை,இந்தியப்படையினர் காலப்பகுதி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில பொதுமக்களும் சபையின் உடைமைகளுக்கு சேதம் ஏற்படுத்தியுள்ளனர்.

மாநகரசபை வாகனங்கள் கட்டிடங்கள் வாடகை இன்றி பயன்படுத்தப் பட்டுள்ளதால் பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மாநகர சபையில்குப்பைகள் ஏற்றிப்பறிக்கப்பட வாகனம் இல்லாத நிலையில் இரு ட்ரக்டர்கள் வாடகை அடிப்படையில் பயன்படுத்தப் படுகிறது. இதற்காக மாதம் 18 ஆயிரம் ரூபா செலுத்தப்படுகிறது.

மாநகரசபை எதிர்நோக்கி உள்ள நிதிநெருக்கடியைப் போக்குவதற்கு புனர்வாழ்வு அமைச்சுதான் உதவிகளை வழங்க வேண்டுமென்றார். (37)

## முப்பதாம் திகதிக்குள் பொருட்களை எடுக்கவும்

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்திற்கு நேற்று முன் தினம் துறைமுக, கப்பல்துறை அமைச்சர் ரூபா கருணாதிலக விஜயம் செய்தார்

அங்கு கப்பல்களில் இருந்து இறக்கப்பட்டு அகற்றப்படாத பொருட்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் எடுத்துச் செல்லா விட்டால் அவை பகிர்ந்து ஏலத்தில் விற்கப்படும் என அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அரசாங்க கூட்டுத் தாபன பொருட்களும்இவற்றில் அடங்குகின்றன

## அரையிறுதி ஆட்டத்தால் ஜொனியன்ஸ் 3விக்கட் வெற்றி

ஜொலிஸ்ரார் நடத்தும் ஷ்ப்ரா கிண்ணத்திற்கான அரையிறுதி ஆட்டம் ஒன்றில் நேற்று சென்றலைற்ஸ் அணியை ஜொனியன்ஸ் அணி மூன்று விக்கட்டுக்களால் தோற்கடித்தது.

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடை பெற்ற இந்த அரையிறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைற்ஸ் அணி 28.3 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 162 ஓட்டளை பெற்றது. புரட்சிதாசன் 53 ஓட்டங்களையும், சாந்திரன், விவேகானந்தன் முறையே 24, 20 ஓட்டங்களையும் பெற்றனர். சூரியகுமார் 11 ஓட்டங்களுக்கு மூன்று விக்கட்டுகளையும் சஞ்சீவன் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டு களையும் மகிந்தா 33 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

இதற்குப் பதிலளித்தாடிய ஜொனியன்ஸ் 7 விக்கட் இழப்பிற்கு 26.5 ஓவர்களில் 168 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கட்டுக்களால் வெற்றியீட்டியது. சஞ்சீவன் 44, சுரேன்குமார் 34, முரளிதரன் 26, ஓட்டங்களைப் பெற்றனர். சதீசன் ஆட்டமிழக்காது 19 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பாலகுமார் 32 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும், விவேகானந்தன் 36 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

### விதை வெங்காய

(1ஆம் பக்க தொடர்ச்சி)

வெங்காய விதைகளை நாற்றுப் போடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சில தினங்களுக்கு முன்னர் நுகர்வோருக்காக பம்பாய் ...

## வர்த்தகவியற் தராதர பரீட்சை!

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடாத்தும் வர்த்தகவியற் தராதரப்பத்திரப் பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 01-06-90 வரை ...

ளின் இசை நிகழ்ச்சிகளை நடத்தினர்.

தமிழீழத்தின் பலபகுதிகளிலிருந்தும் மக்கள் ஜன சமுத்திரம் போல் காட்சியளித்தனர்.

மைதானம் நிறைந்து ஜன சமுத்திரம். அலை மோதியது.

மிகவும் அவதானமாகவும் உறுதியான மனநிலையுடனும், எந்த நெருக்கடியான காலம் வந்தாலும எமது விடிவுக்காகப் போராடும் எமது விடுதலைப் போராளிகளுடன் தோளோடு தோள் நின்று ஒத்துழைப்பு தரவேண்டும்',

# களிமண் பற்றாக்குறையால் ஓட்டுத்தொழில் பாதிப்பு

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலைக்குப் போதிய களிமண் கிடைக்காததால் அதன் உற்பத்திகள் பாதிக்கப்படலாம் எதைத் தெரிவிக்கப்படுகிறது.

வழமையாக ஒரு வருட உற்பத்திக்கென மூவாயிரம் கீப் களிமண் ஏற்றிவரப்பட்டு வந்தது.

ஆனால் 1988 ஆம். 1989 ஆம், 1990 ஆம் ஆண்டுகளில் உற்பத்திக்கென்று ஆயிரத்து ஐநூறு கீப் களிமண் எடுத்து வரப்பட்டது.

இந்த வருடங்களில் இராணுவ நடவடிக்கைகளும் இது குறைவதற்கு ஒரு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது களிமண் எடுக்கும் குழாமுறிப்புக் குளத்தில் தண்ணீர் இருக்கிறது, தொடர்ந்தும் மழை பெய்யுமானால் களிமண் எடுப்பதில் தாமதம் ஏற்படும்.

புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளுக்காக ஓடுகளின் தேவை அதிகரித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஏறாவூர் பகுதியில்:

# பன்னிரேண்டு பாடசாலைகள் புனரமைக்க நோறாட் உதவி

(வந்தாறுமூலை)

ஏறாவூர் பகுதியில் பன்னிரெண்டு பாடசாலைகள் நொறாட் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மட்டக்களப்பு-திருகோணமலை வீதியில் பதினொரு கிலோ மீட்டர் தூரம் திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.

இதேபோல சடைவக்கை மேல் வாய்க்காலும் பள்ளத்துவெளி வாய்க்காலும் துப்பரவு செய்யப்படுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வந்தாறுமூலை சிறுநீர்ப்பாசன புனருத்தாரண திட்டத்தில் 1990ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டம் வந்தாறுமூலை கிரான்புல் அணைக்கட்டை நிரந்தரமாக முழுமையான அணைக்கட்டாக கட்டிமுடிக்கும் வேலைகளும் அமுல் செய்யப்படுகிறது

சித்தாண்டி சந்தனமடு பாதையும் சீரமைக்கப்படுகிறது, அத்துடன் இங்குள்ள அணைக்கட்டு வேலைகளும் நடைபெறுகின்றன.

# நாவலர் மண்டபத்தில் புத்தகக் கண்காட்சி!

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய அமெரிக்க தகவல் நிலையமும் யாழ். பொது நூலகமும் இணைந்து நடாத்தும் புத்தக கண்காட்சி இம்மாதம் 23ஆம் திகதி புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாறிவரும் அமெரிக்காவின் உயர் கல்வியின் தோற்றம் என்ற புத்தகங்களின் இக்கண்காட்சியை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஏ துரைராஜா ஆரம்பித்துவைப்பார்.

இம்மாதம் 24ஆம் 26ஆம் திகதிகளில் பொதுமக்கள் காலை 9.00 மணி முதல் மாலை 4-30 மணி வரை இதனைப் பார்வையிடலாம்.

அமெரிக்காவின் கல்வி சம்பந்மான முன்னூறு நூல்கள் இக் கண்காட்சியில் இடம்பெறும்.

அத்துடன் அமெரிக்காவின் கல்வி பற்றிய சுவரொட்டி கண்காட்சியும் இதில் இடம் பெறும்.

தனை ஒரு விளங்கொளிக்கும் பூமியாக, உலகம் போற்றும் தேசமாக மிளிரச் செய்வது புத்திஜீவிகள், கலைஞர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரது கடமையே ஆகும் என்றார்.

தொடர்ந்து தென்மராட்சி இராணுவ பொறுப்பாளர் குணா அவர்கள் தேனிசை

## வண. லோங்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்னாரின் நினைவாக யாழ். புனித சம்பத்தரிசியார் கல்லூரியில் பேச்சுப்போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசுகள் மேற்படி கல்லூரியில், நாளை செவ்வாய் நடைபெறும் நினைவு விழாவில் வைத்து வழங்கப்படும். (மு)

நாளை மே 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கைத் தபால் திணைக்களம் தேசிய வீரர்கள் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுவைக்க உள்ள வண-பிதா லோங் அடிகளின் முத்திரையின் புகைப்பட மாதிரியை முதற்பக்கத்தில் காண்கிறீர்கள்.

அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவரான லோங் அடிகள் நமது நாட்டில் கல்வி, அறிவு வளர்ச்சிக்கு வித்திட அயராது பாடுபட்டவரென்பது குறிப்பிடத்தக்கது. (21)

## 1 கோடி

(1ஆம் பக்க தொடர்ச்சி)

உதவி அரசாங்க அதிபருமான திரு. சதா தனபாலசிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உயிர் இழந்தவர்களில் 265 குடும்பங்களுக்கு 88 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவும், ஊனமுற்ற 46 பேருக்கு 4 லட்சத்து 945 ரூபாவும் நிவாரணமாக வழங்கப்பட்டது.

வன்செயலினால் பாதிக்கப்பட்டு வீடுகளை விட்டு வெளியேறி, மீண்டும் தமது வீடுகளில் வந்து குடியேறிய 1921 குடும்பங்களுக்கு 38 லட்சத்து 42 ஆயிரம் ரூபா நிவாரணமாக வழங்கப்பட்டது.

வீடுகள் பாதிக்கப்பட்ட 333 குடும்பங்களுக்கு வீடுகளைத் திருப்பிக் கட்டும் நிவாரணமாக 30 லட்சத்து 78 ஆயிரம் ரூபாவும், தொழில் பாதிப்புற்ற 505 குடும்பங்களுக்கு மீண்டும் தொழிலை ஆரம்பிப்பதற்காக 19 லட்சத்து 56 ஆயிரம் ரூபாவும் நிவாரணமாக 1990 ஆம்ஆண்டில்வழங்கப்பட்டது.

இது போன்ற நிவாரணங்கள் இன்னும் பலருக்கு வழங்க வேண்டியிருப்பதால், அதற்கான வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்று வருகிறது.

பூரண ஒத்துழைப்பும் வழங்க உறுதியளித்திருக்கிறார்கள்.

## தொண்டமான் காங்கிரஸ் கவலை

மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தமக்குமட்டுமே உரிய பிரச்சினை என்று இன்றுவரை திரு. தொண்டமான் தலைமையிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூறி வந்தாலும் திரு. சந்திரசேகரன் தலைமையில் புதிதாகத் தோன்றியுள்ள மலையக மக்கள் முன்னணியும், ஒருலட்சம் தோட்டத் தொழிலாளரை நாடு கடத்துவதற்கு அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளும் இவற்றை எதிர்த்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் இன்று பூரண ஹர்த்தாலுக்கு விடுதலைப் புலிகளின் கோரிக்கை மீது நடைபெறும் ஹர்த்தாலுக்குத் தமிழ்பேசும் மக்கள் வழங்கும் ஒத்துழைப்பையும் அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது என்று அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிடுகின்றன.

மலையகத்திலும் புலிகள் கால்வைத்துவிடலாம் என்ற அச்சம் தொழிலாளர் காங்கிரசுக்கும், தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கும் ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## சமாதானம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகளை மறுத்து வந்துள்ளன. வாக்குரிமையைப் பறித்தார்கள். தமிழ் மண்ணில் சிங்களவர்களைக் குடியேற்றினார்கள். சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்து, மொழி உரிமையை மறுத்தார்கள். தரப்படுத்துதல் என்று சொல்லி கல்வி உரிமையை மறுத்தார்கள். இனவாதத்தைத் தூண்டிவிட்டார்கள். சொத்துக்களைச் சூறையாடினார்கள். தமிழ்ப்பெண்களை இம்சித்தார்கள். இதனால் அஹிம்சை வழியில் உரிமைகளைப் பெறமுடியாது என்பதை உணர்ந்த எமது இளைஞர் ஆயுதபாணிகளாயினர். உண்மையான சமாதானம் நிலவவேண்டுமானால் எமது மக்களின் உரிமைகளை வழங்கும்படி அரசாங்கத்துக்கு இடித்துக் கூறுங்கள் என்று பாதயாத்திரிகர்களைப்பார்த்துக் கூறினார்.

டி. பி. திஸநாயக்கா பேசுகையில். கடந்த காலங்களில் ஒரு தாய் பிள்ளைகள் போல் வாழ்ந்த நாம் துரதிஷ்டவசமாக பிளவுபட்டுள்ளோம் என்றும், ஒருவரை ஒருவர் எதிர்த்த நிலை மாறி, சமாதானம் நிலவவேண்டும் என்றார். (தி)

காரி திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்தார்.

வேறு பயிற்சி நெறிகளில் பங்குகொள்ளாதவர்கள மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவர் ஒருவர் ஒரு பயிற்சிநெறியில் மட்டுமே பங்குபற்றலாம் எனவும் அவர் கூறினார். (மு

## மலையகத் தமிழர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்னரும் இவ்வாறான பிரச்சினைகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைக்கப்பட்டது.

எனவே இப்பிரச்சனையை ஜனாதிபதியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் பேசித் தீர்த்துவைக்க முடியும் என்றும் அவர்நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும் மலையக மக்கள் இலங்கையின் வேறு எந்தப் பகுதியிலும் சென்று குடியேற தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## யுத்தம் எம்மீது

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அசைவுகளும் எமது தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களின் ஒவ்வொரு அசைவுகளுக்கும் ஒத்ததாக இருந்தது இதனால் அவர் ஓர் மிகத்திறமை வாய்ந்த வழிகாட்டியாக எந்நேரமும் எம்மால் நினைவு கூரவேண்டியவர் என்றும் குறிப்பிட்டார்.

வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த பொன் மாஸ்ரர் அவர்கள் தலைமை தாங்கினார். இறந்த போராளிகளின் தாய் தந்தையர் உட்பட பல அரசாங்க உத்தியோகஸ்தர்கள் உட்பட யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பொறுப்பாளர் இராஜன் அவர்களும் உரையாற்றினார்.

## மலையகத் தமிழர் வட

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழுக்களுடன் பேச்சு வார்த்தை நடாத்துகிறது. பிரேமதாஸாவுக்கும் புலிகளுக்குமிடையில் நல்லெண்ணம் நிலவியதால் சமீபத்திய பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன என்றார்.

ஸ்ரீ லங்கா யாப்பிலுள்ள 6வது சட்டத் திருத்தத்தை நீக்குவதற்கு பிரேமதாஸ தன்னாலான முயற்சிகளைச் செய்து வருகிறார் என்றும், 6-வது சட்டத் திருத்தத்தை நீக்குவதுதான் தமது முக்கிய நோக்கம் என்றும்,இந்த இலக்கையடையாவிடில் தம்மால் ஊக்கமாகப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற முடியாது என்றார் கரிகாலன்.

டுகளையும் இழந்து 162 ஓட்டளை பெற்றது. புரட்சிதாசன் 53 ஓட்டங்களையும், சாந்திரன், விவேகானந்தன் முறையே 24, 20 ஓட்டங்களையும் பெற்றனர். சூரியகுமார் 11 ஓட்டங்களுக்கு மூன்று விக்கட்டுகளையும் சஞ்சீவன் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டு களையும் மகிந்தா 33 ஓட்டங்களுக்கு

## விதை வெங்காய

(1ஆம் பக்க தொடர்ச்சி)

வெங்காய விதைகளை நாற்றுப் போடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சில தினங்களுக்கு முன்னர் நுகர்வோருக்காக பம்பாய் வெங்காயம் அதிகளவில் சந்தைப் படுத்தியதை அடுத்து சின்ன வெங்காயத்தின் விலை தற்போது ஆயிரம்ரூபா விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக விவசாயிகளில் பலர் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (தி)

## எமது பலம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியில் தமிழீழ ஆய்வு நிறுவனம் பெரும் பங்காற்றும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை என்றும் அவர்மேலும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் உரையாற்றியதுடன் மக்கள் முன்னணித் தலைவர் திரு, மாத்தயா இக்குளிர்பானம் தயாரிக்கும் ஸ்தாபனத்தில் நடைபெறும் வேலைத் திட்டங்களையும் குளிர்பானத் தயாரிப்பு முறைகளையும் பார்வையிட்டார்.

இவ்வைபவத்திற்குப் பெருந்தொகையான மக்கள் சமுகம் தந்திருந்ததுடன் அவர்களும் குளிர்பானத் தயாரிப்பு, பைகளில்அடைத்தல் போன்ற செயல்முறைகளைப் பார்வையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (லோ)

ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும், விவேகானந்தன் 36 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

# வர்த்தகவியற் தராதர பரீட்சை!

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடாத்தும் வர்த்தகவியற் தராதரப்பத்திரப் பரீட்சை எதிர் வரும் ஜூன் மாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 01-06-90 வரை ஏற்றுக்கொள்ளப்படும் என இலங்கை பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (52)

## இன்று விடுதலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனரென்பதும், பொலிசார் கொடுத்த வாக்குறுதியின் பேரில் பதினெட்டாம் திகதி வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதென்றும் செயலாளர் காதர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலவாக்கொல்லையில் ஸ்ரீகதிரேசன் கோயில் முன் இருபதுபேர் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனரென்றும் அட்டன் மாரியம்மன் கோயில் முன் பிரார்த்தனையிலீடுபட்ட இருநூற்றுக்குமதிகமான மக்கள் பொலிசாரினால்தாக்கப்பட்டபோதிலும் பிரார்த்தனையும், அடையாள உண்ணாவிரதமும் நீடித்து வருவதாகவும் தெரிவிக்கும் அந்தஅறிக்கை திங்கட்கிழமை திரு. சந்திரசேகரன் விடுதலை செய்யப்படாவிட்டால் போராட்டம் புதிய வேகத்துடன், புதிய வடிவில் மலையகமெங்கும் பரவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## கோழிக்குஞ்சு விநியோகம்

Bairaha Farm, Christombu Farm, Three Acre Farms ஆகிய பண்ணைகளின் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், புறோயிலர் குஞ்சுகளை முன்கூட்டியே பதிவு செய்து எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

- தெருவில் விற்பனை செய்பவர்களிடம் வாங்கி ஏமாறாதீர்கள்.
- பல வருட அனுபவமுள்ள விநியோகஸ்தர்கள் -

**சற்குணராஜா & பிறதர்ஸ்**

பிரம்படி லேன்,

கொக்குவில்.

(B-1000)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலகத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 21-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.